வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 24.01.2025 வெள்ளிக்கிழமை இதழ் : 24 பக்கங்கள் : 12

## வடக்கு-கிழக்கில் படை வசமிருக்கும் காணிகள் விடுவிக்கப்படவேண்டும்!

### செல்வம் எம்.பி. சபையில் கோரிக்கை



கொழும்பு, ஜன. 24

**முப்படைகள் மக்களின் காணிகளை அபகரிக்கும் விடயத்தை ஒழிக்கவேண்டும் எனவும் இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ள காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் எனவும் ரெலோ தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் நேற்று சபையில் வலியுறுத்தினார்.**

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைக்கு அழைத்த விடயத்தை தாம் வரவேற்பதாக செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

கிளீன் சிறிலங்கா திட்டத்தின் கீழ் அரசாங்கம் முன்னெடுத்துவரும் நல்ல விடயங்களுக்குத் தாம் ஆதரவு வழங்குவதாகவும் செல்வம் அடைக்கலநாதன் கூறினார்.

பாராளுமன்ற

11

## அர்ச்சுனா எம்.பி. உரையாற்ற நேரம் ஒதுக்கப்படாது ஜனநாயக விரோதம்

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க

கொழும்பு, ஜன. 24

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா சிறப்புரிமை தொடர்பில் முன்வைத்த குற்றச்சாட்டு நடவடிக்கை எடுப்பதற்கான பொறுப்பு சபாநாயகருக்கே உள்ளதாகச் சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

அவருக்கு நேரம் ஒதுக்கப்படாமை மிகவும் ஜனநாயக விரோத செயல் எனவும் அதற்கு ஆளும் தரப்பு அதற்குப் பொறுப்பல்ல. அவருக்கு எதிர்க்கட்சித் தலைவரே பேசுவதற்கு நேரம் ஒதுக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

எனவே, அவருக்கு நேரம் ஒதுக்கப்படாதமையினால் பாராளு மன்ற நடவடிக்கைகளுக்கும் இடையூறு ஏற்படுகிறது எனவும் சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

தமது பாராளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாகத்

11

## புலமைப்பரிசில் பெறுபேறுகள் வெளியாகின!

கொழும்பு, ஜன. 24

2024 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, https://www.doenets.lk/exam results என்ற இணையத்

11

## மருதானைப் பொலிஸ் நிலையத்தில் கிளிநொச்சி பெண் ஒருவர் கொலை!

### சிறீதரன் எம்.பி சபையில் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 24

கொழும்பு - மருதானை பொலிஸ் நிலையத்தில் கிளிநொச்சியை சேர்ந்த பெண்ணொருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்திற்கான நீதியை உடனடியாகப் பெற்றுத்தர வேண்டும் என்ற கோரிக்கையையும் அவர் முன்வைத்தார்.

பாராளுமன்றில் அவர் இந்த விடயத்தை பிரஸ்தாபித்தார்.

11

## மூச்சு எடுக்க சிரமப்பட்ட பெண் யாழில் பரிதாபமாக உயிரிழப்பு!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜன. 24

யாழ்ப்பாணத்தில், மூச்சு எடுப்பதற்கு சிரமப்பட்ட பெண் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். மூளாய் - வேரம் பகுதியை சேர்ந்த தர்சன் பாமினி (வயது 36) என்ற மூன்று பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த குடும்பப் பெண்ணுக்கு நேற்று முன்தினம் மூச்சு எடுப்பதில் சிரமம் ஏற்பட்டது. இந்நிலையில் அவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை

11

## யாழில் வீதியால் சென்ற குடும்பஸ்தர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழப்பு!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜன. 24

யாழ்ப்பாணம் - றொட்டியாலடி வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தர் ஒருவர் திடீரென கீழே விழுந்து உயிரிழந்துள்ளார். செட்டிவளவு, இணுவில் மேற்கு பகுதியை சேர்ந்த சபாபதிப்பிள்ளை நித்தியானந்தம் (வயது 65) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் மாலை மோட்டார் சைக்கிளில் வீதியால் பயணித்துக் கொண்டிருந்தவேளை மயங்கி விழுந்துள்ளார்.

11

## நான் கொல்லப்பட்டால் அரசாங்கமே பொறுப்பு!

### சபையில் அர்ச்சுனா எம்.பி.

கொழும்பு, ஜன. 24

நான் புலி என்றால் என்னை கைது செய்யுங்கள் என பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா சபையில் தெரிவித்தார்.

அதேவேளை , தான் கொலை செய்யப்பட்டால் அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும் எனவும் அவர் கூறினார்.

பாராளுமன்றம் சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நேற்று கூடியது.இதன் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

11

## 2026ஆம் ஆண்டு முதல் கல்வி முறை மாற்றம்!

கொழும்பு, ஜன. 24

பாடத்திட்டங்கள் , பரீட்சை முறைமை உள்ளிட்ட புதிய கல்வி சீர்திருத்தங்கள் 2026 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு பிரதமர் இந்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்தார்.

முந்தைய அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட கல்வி சீர்திருத்த திட்டங்களில் நேர்மறையான மாற்றங்களைச் செய்ய எதிர்பார்ப்பதாகவும்

11

## கிளிநொச்சி வெள்ளத்தில்!



கிளிநொச்சி, ஜன. 24

கிளிநொச்சி மக்கள் தொடர்ச்சியாக மூன்றாவது முறையாகவும் வெள்ளத்தினால் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இரணைமடுக் குளத்தின் வான் கதவுகள் மூன்றாவது முறையாகவும் திறக்கப்பட்டதன் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தின் ஐயன் கோயிலடி, ஊரியான், பெரியகுளம் கண்டாவளை உள்ளிட்ட பகுதிகளில் வயல் நிலங்களுக்கும் அழிவை ஏற்படுத்தியுள்ளது.

வெள்ளப் பாதிப்பு காரணமாக குளங்களில் நீர்மட் டம் அதிகரித்தமையால் முதலைகளும்

11

## கடவுச்சீட்டை வழங்கும் சேவை வழங்குநர் யார்?

### எதிர்கட்சித்தலைவர் கேள்வி

கொழும்பு, ஜன. 24

கடவுச்சீட்டுகளை வழங்கும் சேவை வழங்குநர் யார் என அறிந்து கொள்ள விரும்புவதாக, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றம் சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நேற்று கூடியது.

இதன்போது நிலையியல் கட்டளையின் கீழ் கேள்வி எழுப்பிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வெளிநாட்டு கடவுச்சீட்டைப் பெறுவது

11

## வீதியைக் கடக்க முயன்ற குடும்பஸ்தர் மோட்டார் சைக்கிள் மோதி உயிரிழப்பு!

### ஆவரங்கால் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 24

யாழ்ப்பாணத்தில் வீதியை கடக்க முற்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் அவர் உயிரிழந்தார். அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி பகுதியைச் சேர்ந்த தயநாதன் விதுசன் (வயது 32) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் நேற்று முன்தினம் ஆவரங்கால் சந்தியால் வீதியைக் கடக்க முற்பட்டுள்ளார். இதன்போது யாழ்ப் பாணத்தில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள் அவர் மீது மோதியது.

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுகம் திட்டம் குறித்து எம்மிடம் முழுமையான ஆவணங்கள் இல்லை

## வடமாகாண ஆளுநர் வேதநாயகன் கவலை



யாழ்ப்பாணம், ஜன.24

**யாழ்ப்பாணத்துக்கான ஆறு என்ற அடிப்படையில் ஆறுமுகம் திட்டம் தொடர்பில் பேசி வந்தாலும், அது தொடர்பில் முறையான - முழுமையான ஆவணங்கள் எங்களிடம் இல்லை என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் கவலை வெளியிட்டுள்ளார்.**

யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் குடிசார் மற்றும் சுற்றாடல் சங்கத்தின் முயற்சியில் உருவான 'த நெயில்' சஞ்சிகை வெளியீடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வின்போதே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். ஆளுநர் தனது உரையில்,

முன்னைய காலங்களில் பொறயியலாளர்கள் பலர் இந்த மாகாணத்துக்காக அர்ப்பணிப்புடன் உழைத்திருந்தாலும் அவர்களின் அந்தக் கடின உழைப்புப்பற்றி எந்தவொரு ஆவணங்களும் எங்களிடம் இல்லை.

குறிப்பாக நாங்கள் அன்று தொடக்கம் யாழ்ப்பாணத்துக்கான ஆறு என்ற அடிப்படையில் ஆறுமுகம் திட்டம் தொடர்பில் பேசி வந்தாலும், அது தொடர்பில் முறையான - முழுமையான ஆவணங்கள் எங்களிடம் இல்லை.

ஆனால், தற்போது வெளியிடப்படும் 'த நெயில்' சஞ்சிகை ஊடாக பொறியியலாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அனுபவங்கள் அனைவருக்கும் பகிரப்படுகின்றது. இது சிறப்பான முயற்சி. பாராட்டப்படவேண்டியது.

சவால்களை எதிர்கொள்ளாவிட்டால் எங்களின் ஆளுமையை விருத்தி செய்ய முடியாது. சவால்களை எதிர்கொள்ளும்போதுதான் அந்தச் சவால்களை நாங்கள் வெற்றிகொள்கின்றோம். அதன் ஊடாக எங்கள் ஆளுமைகளை மேலும் விருத்தியடையச் செய்து கொள்ளலாம். மிகப் பரந்துபட்ட அனுபவமானது எழுத்து மூலமான போதனையைவிட மேம்பட்டது.

மாணவர்களின் புத்தாக்க சிந்தனைக்கும் இடமளிக்கும் வகையில் அவர்களுடைய ஆக்கங்களையும் இந்த சஞ்சிகையில் உள்வாங்கியமை சிறப்பம்சமாகும். புத்தகக் கல்விக்கு அப்பால் பரிசோதனைகள் - பயிற்சிகள் மாணவர்களுக்கு முக்கியம். அது இல்லாமல் அவர்களது அறிவு முழுமையடையாது"- என்றார். (எ)

# வவுனியா குடிவரவு குடியகல்வு அலுவலகத்துக்குள் வெள்ளம்!

வவுனியா, ஜன. 24

வவுனியாவில் பெய்து வரும் கனமழை காரணமாக குடிவரவு -குடியகல்வு திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் வெள்ளத்தில் முழ்கியதால் அதன் செயற்பாடுகள் பாதிப்படைந்துள்ளன.

வவுனியாவில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வந்த நிலையில் நேற்றுமுன்தினம் காலை முதல் கனமழை பெய்தது.

இதனால் வவுனியா குடிவரவு குடியகல்வு பிராந்திய அலுவலகத்துக்குள் வெள்ள நீர் புகுந்து வெள்ளக்காடாக காட்சியளித்தது.

இதனால் அதன் கடவுச்சீட்டு விநியோகச் செயற்பாடுகள் பாதிப்படைந்துள்ளதுடன், அலுவலகத்தில் கடமையாற்றுவோர் வெள்ளத்துக்குள் நின்று தமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து, குறித்த நீரை வெளியேற்றுவதற்கு அலுவலக உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்தனர். (அ-10)

# யாழில். மாணவி துஷ்பிரயோகம் பாடசாலை ஆசிரியர் கைதானார்!

யாழ்ப்பாணம், ஜன. 24

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலை ஒன்றில் 14 வயதான மாணவியை துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கிய குற்றச்சாட்டில் 52 வயதான ஆசிரியர் ஒருவரை நேற்று முன்தினம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட ஆசிரியரை யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், பாதிக்கப்பட்ட மாணவி மருத்துவப் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# ஆவரங்காலில் நடந்த விபத்தில் இரண்டு இளைஞர்கள் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜன. 24

ஆவரங்கால் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் பலத்த காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் ஆவரங்கால் பகுதியில், மாடுகளை மேய்ச்சலுக்காகக் கூட்டிச் சென்ற இளைஞர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சம்பவத்தில் நடந்து சென்றவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி கை, கால், முறிவடைந்த நிலையிலும், மோட்டார் சைக்கிள் ஓட்டுநரும் தலையில் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையிலும் காணப்பட்டனர்.

இருவரும் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

குறித்த சம்பவத்தில் அச்சுவேலி தெற்கு பகுதியைச் சேர்ந்த 32 வயது இளைஞரும், தனியார் காப்பீடு நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் நெல்லியடி கரவெட்டி பகுதியைச் சேர்ந்த 23 வயது இளைஞனும் இவ்வாறு காயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிள் ஓட்டுநரின் அதிக வேகமே இந்த விபத்துக்கு காரணம் என தெரியவந்துள்ளது.

விபத்து தொடர்பான விரிவான விசாரணைகளை அச்சுவேலி போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# கடும் மழை வெள்ளத்தால் 19 குடும்பங்கள் பாதிப்பு

## 67 பேருக்கு உடன் நிவாரணம் வழங்க வவுனியா அரச அதிபர் அறிவுறுத்தல்



வவுனியா, ஜன.24

தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக வவுனியா மாவட்டத்தில் இடம்பெயர்ந்து தற்காலிக முகாமில் தங்கியுள்ள 19 குடும்பங்களைச் சேர்ந்த 67 பேருக்கு நிவாரணம் வழங்க உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ. ஏ. சரத்சந்திர அதிகாரிகளுக்கு நேற்று அறிவுறுத்தியுள்ளார்.

செட்டிக்குளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பீடியா பண்ணை கிராமம் வவுனியாவிலிருந்து சுமார் நாற்பது கிலோமீற்றர் தொலைவில் மிகவும் கடினமான சூழலில் அமைந்துள்ள கிராமமாகும்.

செட்டிக்குளம் - மன்னார் பிரதான வீதியிலிருந்து ஆறு கிலோமீற்றர் தொலைவில் காட்டுப் பாதையில் அமைந்துள்ள இந்தக் கிராமத்தில் பாதுகாப்பான மையத்தை அமைக்கக் கூட ஒரு நிரந்தரக் கட்டடம் இல்லை.

மிகவும் சிரமத்துக்கு மத்தில் வாழ்க்கையை நடத்தி வந்த இந்தக் குடும்பங்கள் வெள்ளத்தால் இடம்பெயர்ந்தனர். உழவியந்திரம் மற்றும் பாரவூர்திகளை பயன்படுத்தி அதற்குள் தங்கியிருக்கின்றனர்.

குறித்த பிரதேசத் துக்கு நேரில் சென்று பார்வை யிட்ட அரச அதிபர், இந்த மக்களுக்கு சமைத்த உணவு மற்றும் தங்குமிடத்தை வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். (எ-10)

# வடமராட்சியில் வீட்டுக்கு தீ வைத்த விசமிகள் சிலர்!



யாழ்ப்பாணம், ஜன. 24

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் மேற்கு பகுதியில் வீடு ஒன்று நேற்று முன்தினம் அதிகாலை தீப்பிடித்துள்ளது.

அதிகாலை 3.30 மணியளவில் வீடு தீப்பிடிப்பதைக் கண்ட குடும்பஸ்தர் கடும் முயற்சியின் பின் தீயை அணைத்துள்ளார்.

விசமிகளால் தனது வீட்டுக்கு தீ வைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கும் குடும்பஸ்தர் சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

அதனடிப்படையில் சம்பவ இடத்துக்கு சென்ற மருதங் கேணி பொலிஸார் தீ பிடித்த வீட்டை பார்வையிட்டதுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (அ-02-05)

# ரூ.2,50,000 இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டு; தொழில் திணைக்கள அதிகாரி கைது!

கொழும்பு, ஜன. 24

2,50,000 ரூபாய் பணத்தை கையூட்டாக பெற்ற குற்றச்சாட்டில் தொழில் திணைக்கள அதிகாரி ஒருவரை கையூட்டுக்கு எதிரான விசாரணை ஆணைக் குழுவினர் கைது செய்துள்ளனர்.

தனியார் நிறுவனமொன்று ஊழியர்களுக்குச் செலுத்த வேண்டிய வேதனம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பில், சட்ட நடவடிக்கை எடுக்காதிருப்பதற்கும், விசாரணைக்காகப் பெறப்பட்ட ஆவணங்களை மீள ஒப்படைப்பதற்கு இந்த அதிகாரி கையூட்டல் கோரியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கல்கிசை பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் கையூட்டாக கோரிய பணத்தைப் பெற்றுக் கொண்ட போது சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டதாக கையூட்டலுக்கு எதிரான விசாரணை ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

சந்தேகநபரை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
24.01.2025 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், தை 11

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## பெயர் மாற்றம் ஓர் அரசியல் குறீயீடு

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் நிறுவப்பட்ட யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தின் பெயர் மாற்றம் தொடர்பில் சல சலப்புக்கள் காணப்படுகின்றன. ஆரம்பத்தில் கலாசார நிலையத் தின் பெயரில் உள்ளடக்கப்பட்டிருந்த 'யாழ்ப்பாணம்' என்னும் பெயர் மாற்றப்பட்டு, அதற்குப் பதிலாக திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையம் என்று பெயரிடப்பட்டுள்ளது. இதனை ஆட்சேபித்து, தமி ழர்களின் பெருமைக்கும் இறுமாப்புக்கும் உடையதான யாழ்ப் பாணம் என்பதை அகற்றியமை எம்மை அவமதிக்கும் செயலென் றும் அபிப்பிராயங்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

இதில் பெருமைப்படுவதற்கோ சிறுமைப்படுவதற்கோ எதுவும் இல்லை - மாறாக, பெயர் மாற்றம் அரசாங்கத்துடன் தொடர்புடை யது. தற்போது இவ்வாறான விடயங்களில் தலையீடு செய்வதற்கு தமிழ் மக்கள் மத்தியில் எந்தவோர் அதிகார அரசியல் கட்டமைப்பும் இல்லை - ஒருவேளை, மாகாண சபை இயங்குநிலையில் இருந்தி ருந்தால் - ஆகக்குறைந்தது மாநகர சபை நிர்வாகம் தமிழரிடம் இருந்திருந்தால் கூட, அவற்றுக்குத் தெரியாமல் இவ்வாறான விட யங்களை மேற்கொள்வதை ஆட்சேபித்திருக்க முடியும் - ஆனால், அதற்கான வாய்ப்புகள் அனைத்துமே முடக்க நிலையில் இருக் கின்றன.

இந்த நிலையில் ஒரு கலாசார நிலையத்தின் பெயர் மாற்றத்தை அதிகாரிகள் மட்டத்திலேயே முடித்துக் கொள்ளக் கூடிய சூழலோ காணப்படுகின்றது. திருவள்ளுவர் என்னும் பெயர் தமிழ் மக்களை சிறுமைப்படுத்தக் கூடிய ஒன்றல்ல - அதிலும் பெருமைப்பட முடியும் - ஆனால் இங்கு பிரச்னை பெருமைப்படுவது பற்றியதல்ல - மாறாக அரசியல் சூழ்நிலை எந்தளவிற்கு மாற்றமடைந்து செல்கின்றது என் பதைத்தான் தமிழ் அரசியல்வாதிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

தேசிய மக்கள் சக்தி வடக்கு - கிழக்கிலும் குறிப்பிடத்தக்க வெற்றி யைப் பெற்றிருப்பதானது, ஈழத் தமிழர் அரசியல் பற்றிய இதுவரை யான பார்வையிலும் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றது. புதுடில்லியின் ஈழத் தமிழ் மக்களுக்கான ஆதரவு நிலையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

அநுரகுமார திஸநாயக்கவின் புதுடில்லி விஜயத்தின் போது, வழமைக்கு மாறாக அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை இந்திய பிரதமர் மோடி உச்சரிக்காமல் விட்டமையும் இந்த அரசியல் பார்வை மாற்றத்தின் வெளிப்பாடுதான் - ஏனெனில் தமிழ் மக்களில் - அதிலும் வடக்கு மாகாணத்தில் - அதாவது பெருமையாக கரு தப்படும் யாழ்ப்பாணத்தில் பெரும்பான்மையான தமிழ் மக்கள் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க மீதும் அவரது கட்சியின் மீதும் நம்பிக்கை வைத்திருக்கும் சூழலில், அந்த அரசாங்கத்திற்கு ஈழத் தமிழர் சார்பில் பரிந்துரைகளை வெளியார் முன்வைப்பது அடிப் படையில் முரண்பாடான விடயமாகும். அதில் இராஜதந்திரரீதியில் சிக்கல்கள் உண்டு.

இதன் விளைவாகவே புதுடில்லியின் சொற்களில் மாற்றம் ஏற் பட்டது. புதுடில்லியின் நிலைமையே இவ்வாறான தர்மசங்கடமான நிலையில் இருக்கும் போது, மேற்குலக இராஜதந்திரிகளின் நிலை மையோ இன்னும் சிக்கலானது. அவர்களால் எதனையும் இந்த அரசாங்கத்திடம் கூற முடியாது - ஏனெனில், பாதிக்கப்பட்ட மக்கள் தேசிய மக்கள் சக்தியின் மீது நம்பிக்கை கொண்டு, அவர்களை ஆதரித்திருக்கின்றனர். இந்தப் பின்புலத்திலேயே கலாசார மத்திய நிலையத்தின் பெயர் மாற்றத்தையும் புரிந்து கொள்ள வேண்டும்.

## சர்வதேச வர்த்தகக் கண்காட்சி முற்றவெளியில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.24


யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி முற்ற வெளியில் இன்று முதல் மூன்று தினங்களுக்கு நடை பெறவுள்ளது. பிளாஸ்ரிக் அற்ற வலயத்தை உறுதிப் படுத்தும் விதமாக இம்முறை இந்தக் கண்காட்சி முன்னெ டுக்கப்படவுள்ளது.

பொருளாதார முன்னேற் றத்துக்கான வடக்கின் நுழை வாயில் என்ற தொனிப் பொருளுடன் யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண் காட்சி 2002ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.இதன் தொடர்ச்சியாக 15ஆவது ஆண்டாக இந்த வருடமும் கண்காட்சி ஒழுங்கமைக்கப் பட்டுள்ளது. இம்முறை 45 ஆயிரம் தொடக்கம் 60 ஆயி ரம் வரையிலான பார்வையா ளர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படும் நிலை யில், 350இற்கும் மேற்பட்ட காட்சிக்கூடங்கள் அமைக் கப்பட்டுள்ளன.

விவசாயம், தொழில்நுட் பம், விருந்தோம்பல், கல்வி, உணவு, நவநாகரிகம் மற்றும் இதர தொழில்துறைகள் என பல்வேறுபட்ட வர்த்தக நிறு வனங்களின் பொருள்கள் மற்றும் சேவைகள் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.

இம்முறை கூடுதலான நிலப்பரப்பில் கூடுதலான காட்சிக்கூடங்கள் அமைக் கப்பட்டுள்ளன. சிறுவர்களை மகிழ்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் முதல் பல்வேறு பட்ட புதிய ஏற்பாடுகள் இம் முறை வர்த்தகக் கண் காட்சி யில் அறிமுகப்படுத்தப்பட் டுள்ளன என்று ஏற்பாட்டா ளர்கள் அறிவித்துள்ளனர். (எ)

## யாழ்ப்பாணத்தில் சிறப்பாக நடைபெற்ற கலா ரசனாவின் இசை, நடன நிகழ்வுகள்





யாழ்ப்பாணம், ஜன.24


புலம்பெயர் நாடுகளிலும் இலங்கையிலும் எமது இளம் தலைமுறையினரின் கலைத் திறன்களை ஒரே மேடையில் சங்கமிக்க வைத்து, எதிர்கால சந்ததியினர் தம்மிடையே ஓர் அந்நியோன்யத்தை தொடர்வதை நோக் காகக்கொண்டு லண்டனின் 'கலா ரசனா' அமைப்பு யாழ்ப்பாணம் கலாசார மண்டபத் தில் ஆண்டு தோறும் இரு இசை, நடன நிகழ்வுகளை நடத்துகிறது. கடந்த ஆண்டு ஓகஸ்டில் நடைபெற்ற இதன் முதலாவது நிகழ்வைத் தொடர்ந்து இரண்டாவது நிகழ்வு கடந்த 17, 18ஆம் திகதிகளில் நடைபெற்றது. முதல் நாள் சிறப்பு இசை அரங்காக, இந்தியா விலிருந்து வந்த பிரபல திரை இசைப் பின் னணி பாடகரும் கர்நாடக இசைக் கலை ஞருமான பாலக்காடு சிறீராமின் இசைக் கச் சேரி வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்தியா விலிருந்து வந்த பக்கவாத்திய கலைஞர்கள் பக்கல ராமதாஸ் (வயலின்), ஏ. எஸ். ரங்க நாதன் (மிருதங்கம்) ஆகியோருடன் இலங் கைக் கலைஞரான சிவசுந்தரசர்மாவும் (கெஞ்சிரா) கலந்துகொண்டார்.

இரண்டாம் நாள் இரு நடன நிகழச்சிகள் நடைபெற்றன. அமெரிக்காவிலிருந்து வந்த பரதநாட்டிய கலைஞர் கலைமகள் சந்திர சேகரம் 'சங்கமும் சுனாமியும்' என்று, சங்க இலக்கிய பாடல்கள் சிலவற்றை தற்போ தைய காலத்துடனும் தொடர்புபடுத்தி, சிறந்த உரை விளக்கமும் சேர அளித்த நடன நிகழ்வு சிறப்பாக இருந்தது.

அதைத் தொடர்ந்து கொழும்பு தியாக ராஜர் கலைக்கோவில் அளித்த 'மனம் சுமந்த வலிகள்' நாட்டிய நாடகம் யதார்த்தமாய் வெளிப்படுத்திய ஈழத் தமிழரின் வரலாறும், வாழ்வும், அவர்களின் அண்மைக்கால அவ லங்களும் அவை முழுமையையும் மௌன மாக்கி ஆட்கொண்டமை பெரு வியப்பாய் அமைந்தது. நம்மைப்பற்றிய நினைவுகளை மீட்டியது. நடன ஆசிரியை திருமதி பவானி குகப்பிரியா நெறிப்படுத்தியிருந்த இந்த நாட்டிய நாடகத்தில் 30 பேர் வரை பங்கு பற்றியிருந்தனர். தென்கயிலை ஆதீன முதல் வர் அகத்தியர் அடிகளார் பாடல் வரிகளை ஆக்கியிருந்தார். கலா ரசனாவின் இந்த 'சங்க மம்' நிகழ்வின் இரண்டு நாள் நிகழ்வும் அரி தான ஒரு வாய்ப்பாக இருந்தது. அடுத்த சங்க மம் நிகழ்வு எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் நடைபெறவிருப்பதாக ஏற்பாட்டா ளர்கள் தெரிவித்தனர்.

முதல் நாள் நிகழ்ச்சியில் விருந்தினர்களாக வடமாகாண பிரதம செயலாளர் எல். இளங் கோவன், வட மாகாண கல்வி அமைச்சின் செய லாளர் பற் றிக் டி றஞ்சன் ஆகியோர் கலந்து கொண்டனர், இரண்டாம் நாள் நிகழ் வில் வடமாகாண ஆளுநர் நா. வேத நாயகன் பிர தம விருந்தினராகக் கலந்து கொண்டார். (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு






**மேடம்**

உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. பிள்ளைகளின் பொறுப்புணர்வு அதிகமாகும். கல் யாணப் பேச்சுவார்த்தை சாதகமாகும்.

**இடபம்**

குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும்.வழக்கில் வெற்றி பெறுவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. பிரபலங்கள் அறிமுகமா வார்கள். வெளிவட்டாரத்தில்புதியவர்கள்நண்பர்களாவார்கள்.

**மிதுனம்**

புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். பிள்ளைகளின் உயர்கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள்.

**கடகம்**

எதிர்ப்புகள் அடங்கும். வெளியூர் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. பழைய நண்பர்கள் உதவுவார்கள். தாயாருடன் வீண் விவாதம்வந்து போகும்.

**சிம்மம்**

உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். அரசு காரியங்கள் நல்லவிதத்தில் முடியும். உடன் பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**கன்னி**

கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உறவினர்கள் உங்களைப் புரிந்துக் கொள்வார்கள்.

**துலாம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் எந்த வேலைகளையும் முடிக்க முடியாமல் தடை தாமதங்கள் ஏற்படும். உறவினர்களுடன் விரிசல்கள் வரக்கூடும்.

**விருச்சிகம்**

எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து போகும். பிள்ளைகளை அன்பால் அரவணைத்துப் போங்கள். மருத்துவ செலவுகள் ஏற்படும். அசதி சோர்வு வந்து விலகும். ஆதாயம் தரும்நாள்.

**தனுசு**

எதையும் சாதிக்கும் துணிச்சல் பிறக்கும். பெற்றோரின் ஆதரவு பெருகும். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள்.

**மகரம்**

சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

**கும்பம்**

இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மீனம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் கொஞ்சம் அலைச்சலும் சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். குடும்பத்தில் பல விஷயங்களை நீங்களே பார்க்க வேண்டி இருக்கும். நிதானம் தேவைப்படும் நாள்.

# யாழில் ‘த நெயில்’ சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன.24

யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் குடிசார் மற்றும் சுற்றாடல் சங்கத்தின் முயற்சியில் உருவான “த நெயில்”சஞ்சிகை வெளியீடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சி. சிறீசற்குண ராஜாவும், கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் ம. பற்றிக் டிறஞ்சனும் கலந்துகொண்டனர். (எ-05)



# வவுனியா செட்டிக்குளத்தில் 40 ஏக்கர் வயல்கள் பாதிப்பு

வவுனியா,ஜன.24

வவுனியா மாவட்டத்தில் நிலவும் தொடர் மழை காரணமாக செட்டிக்குளம் ஆண்டியாபுளியங்குளம், ராமையன் குளம் பகுதியில் சுமார் 40 ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

குறிப்பாக வவுனியா பாவற்குளத்தின் நான்கு வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ள நிலையில் இதற்கு கீழுள்ள வயல் நிலங்களே பாதிப்படைந்துள்ளன.

மேலும், அறுவடைக்குத் தயாராக இருந்த நிலையில் நெற் பயிர்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் முதல் வெள்ள நீர் தொடர்ச்சியாக பயிர்களுக்கு மேலாக பாய்ந்து வருவதாகவும் இதனால் தமது விவசாய செய்கை முற்றாகப் பாதிக்கப் பட்டுள்ளதுடன், தமது வாழ் வாதாரம் கேள்விக்குறியாகி யுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

# தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் தொலைத்தொடர்பு வயர்கள் அறுப்பு

வடமராட்சி, ஜன.24

வடமராட்சி, கரவெட்டி - கரணவாய் பகுதியில் தொடர்ச்சியாக இலங்கை தொலைத் தொடர்பு சேவைக்குரிய வயர்கள் திருடர்களால் வெட்டி எடுக்கப்பட்டு வருவதாகவும், இது தொடர்பில் 8 முறைப்பாடுகள் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்டுள்ளதாகவும் ஆனால், இதுவரை எவரையும் பொலிஸார் கைது செய்யவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருடர்களால் அரச சொத்தான சிறீலங்கா ரெலிலொம் இணைப்பு கேபிள்கள் அறுக்கப் படுவதனால் தொலைத் தொடர்பு சேவைகள் பாதிக்கப் படுவதாகவும், அரச சொத்துகள் நாசமாக்கப்படுவதற்கு எதிராக நடவடிக்கை ஏதும் எடுக்கப்படுவதில்லை என்றும் பெயர் குறிப்பிட விரும்பாத உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(எ-02)

# வட்டுக்கோட்டையில் புத்தக அரங்க விழா

யாழ்ப்பாணம், ஜன.24

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு “நூறு மலர்கள் மலரட்டும்“ என்ற தொனிப்பொருளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் 22ஆவது நிகழ்வு இன்று முதல் நாளை மறுதினம் 26 ஆம் திகதி வரை (வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில்) வட்டு. இந் துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில், நாளை சனிக்கிழமை பிற்பகல் 03.30 மணிக்கு புத்தக அரங்க விழாவின் இரண்டாம் நாள் மாலை நிகழ்வு ஈழத்து நூல்களை அறிவோம் எனும் தொனிப்பொருளில் புத்தகங்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் அண்மையில் காலமாகிய அரங்கப் பேராளுமை குழந்தை ம. சண்முகலிங்கத்தின் நினைவரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் நூல் அறிமுக உரைகளை சித்திரலேகா மௌனகுருவின் “பெண்நிலைச் சிந்தனைகள்“ கட்டுரைத் தொகுப்பு தொடர்பாக சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் யாழினி வினோத்குமாரும், கடந்த ஆண்டு கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சாகித்திய மண்டல முதற் பரிசைப் பெற்றுக்கொண்ட மைதிலி றெஜினோல்டின் “ஓட்டிச உலகில் நானும்...“ என்ற தன் வரலாற்று நூல் பற்றி இளம் எழுத்தாளர் மாதவி உமாசுதசர்மாவும், மாயனின் “நூறு மின்னல்கள்“ நாவல் தொடர்பாக வவுனியா மற்றும் தர்கா நகர் கல்வியியற் கல்லூரிகளின் ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி ந. இரவீந்திரனும், தேன்மொழி சபாவின் “ஆத்திசூடிக் கதைகள்“ பற்றி வட்டு. இந்துக் கல்லூரி ஆசிரியர் எம். ஏ. முருகதாசனும், வி. ரி. இளங்கோவனின் “ஈழத்து இலக்கியச் சிற்பிகள்“ நூல் தொடர்பாக யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் எம். மயூரனும் ஆற்றவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து மாலை 5 மணியளவில் கூத்தாட்டு அவைக் களத்தினரின் தயாரிப்பில், வி. விஜயரூபனின் எழுத்துரு, நெறியாள்கையில் “பட்டறிவு“ மற்றும் சண் நாடகக் குழுவின் தயாரிப்பில், பு. கணேசராசாவின் எழுத்துரு மற்றும் நெறியாள்கையில் “காதலுக்கு மருந்து“ ஆகிய நாடகங்களும் நடைபெறவுள்ளன.அத்தோடு, புத்தகக் கண்காட்சி சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிகள்

வவுனியா,ஜன.24

வவுனியா - கனகராஜன் குளம், பெரியகுளம் பிரதேசத்தை சேர்ந்த இரு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்டவர்களின் மருத்துவச் செலவுக்காக 40, 000 ரூபாய் நிதியும், கனகராஜன்குளம் - பெரியகுளம் பிரதேசத்தை சார்ந்த விசேட தேவைக்குட்பட்ட வரின் மருத்துவச் செலவுக்காக 30, 000 ரூபாய் நிதியும் மோகனதாஸ் சுவாமிகளால் வழங்கப் பட்டது.

அத்துடன், வவுனியா - வடகாடு, பிரமணாலங்குளம் சிறீ முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலைக்கான புதிய கட்டடம் தொடர்பான கோரிக்கைக்கு அமைவாக, நேரடியாகச் சென்று கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதுடன் அப் பாடசாலைக்கு கட்டடம் அமைத்து கொடுப்பதற்கும், மாணவர்களுக்கான சத்துணவுக்கு மாதாந்தம் 10, 000 ரூபாய் நிதி வழங்குவதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மோகனதாஸ் சுவாமிகள் தெரிவித்தார். (எ- 02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவிகளின் சுகாதார பிரச்னைக்கு தீர்வு

கொழும்பு, ஜன. 24

நாட்டிலுள்ள பாடசாலைகளில் 6ஆம் தரத்துக்கு மேற்பட்ட மாணவிகளின் சுகாதார பிரச் னைக்கு தீர்வு வழங்கும் நோக்கிலான கலந்துரையாடல் நேற்று முன் தினம் கல்வி அமைச்சரும் பிரதமருமான கலாநிதி ஹரிணி அமரசூரியவின் தலைமையில் கல்வி அமைச்சு வளாகத்தில் இடம் பெற்றுள்ளது.

கடந்த வருடம், பாடசாலைகளில் கற்றல்-கற்பித்தல் செயல்முறையை பேணுவதற்கு இன்றியமையாத காரணியான குழந்தைகளின் ஆளுமை வளர்ச்சி மற்றும் ஆரோக்கியமான நல்வாழ்வுக்கு உதவும் வசதிகளை வழங்கும் நோக்கத்துடன் சுகாதார துவாய் கொள்வனவு செய்வதற்கான வவுச்சர் வழங்கும் நிகழ்ச்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த சுகாதார திட்டத்தை, பெண் மாணவர்களின் பாடசாலை வருகையை ஊக்குவிக்கும், நிதி பருவத்தில் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சுகாதார அறியாமை காரணமாக கல்வியில் சரியான கவனம் இல்லாதது போன்ற பாதகமான சூழ்நிலைகளைத் தவிர்க்கும் நோக்கத்துடன் கல்வி அமைச்சு நடைமுறைப் படுத்தியது.

இந்த கலந்துரையாடலில், சுகாதாரத் துவாய் உற்பத்திக்காக இலங்கையில் தர நிர்ணயக் கட்டளைகள் நிறுவனத்தின் சான்றிதழ் பெற்ற பிரதான 4 கம்பனிகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

(அ)

# இலங்கைக்கு கிடைக்கும் 200 மில்லியன் டொலர்கள்

## உலக வங்கி திட்டத்தின் கீழ்

கொழும்பு, ஜன. 24

**அடுத்த மூன்று மாதங்களில் 200 மில்லியன் டொலர் மதிப்புள்ள மூன்று பெரிய திட்டங்களுக்கு நிதியளிக்க உலக வங்கி திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

உலக வங்கியின் தெற்காசியாவிற்கான துணை தவிசாளர் மார்ட்டின் ரைசர் இலங்கைக்கான தனது இரண்டு நாள் பயணத்தை நேற்று முன் தினம் முடித்துக்கொண்டார்.

இலங்கைக்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்ட அவர், ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் பிற அரசு அதிகாரிகள், தனியார் முதலீட்டாளர்கள் மற்றும் மேம்பாட்டு பங்காளிகளைச் சந்தித்து இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் நீண்டகால வளர்ச்சிக்கான நாட்டின் தொடர்ச்சியான முயற்சிகள் குறித்து கலந்துரையாடல்களை நடத்தினார்.

இந்நிலையில், அடுத்த மூன்று மாதங்களில் 200 மில்லியன் டொலர் மதிப்புள்ள மூன்று பெரிய திட்டங்களுக்கு நிதியளிக்க உலக வங்கி திட்டமிட்டு மீண்டும் தனது ஆதரவை உறுதி படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, குறித்த திட்டங்கள் கிராமப்புற மேம்பாடு மற்றும் கல்விக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் தனியார் முதலீட்டை ஈர்க்கும் வசதியை ஏற்படுத்தும் நோக்கிலும் முன்னேடுக்கப்படவுள்ளது. (அ)

# பழங்குடியினரின் பிரச்னைகளை தீர்ப்பதற்கு அரசு விசேட கரிசனை



கொழும்பு, ஜன. 24

பழங்குடியின மக்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பான சட்டச் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக சுற்றாடல் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் நேற்று முன்தினம் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் பங்களிப்புடன் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

ஐக்கிய நாடுகளின் சாசனத்தின்படி தயாரிக்கப்பட்ட பழங்குடியினர் உரிமைச் சட்டம் குறித்தும், பழங்குடியினர் அன்றாட வாழ்வில் சந்திக்கும் பிரச்னைகள் குறித்தும் விளக்கமளித்த பழங்குடியின தலைவர், கடந்த அரசுகள் சில நடவடிக்கைகள் எடுத்தாலும், அவர்களின் பிரச்னைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

பழங்குடியின மக்கள் நாட்டின் வரலாற்றுச் சொத்து என்றும், அவர்களைப் பாதுகாப்பதும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதும் இன்றியமையாதது என்றும் கலாசார அமைச்சர் சுனில் செனவி இதன்போது தெரிவித்தார்.

பழங்குடியின மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான சட்ட விதிமுறைகளை சுற்றாடல் அமைச்சு உடனடியாக நடைமுறைப் படுத்துமென தம்மிக்க பட்டபெந்தி தெரிவித்தார்.

அதற்கான சட்ட நிலைமைகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து சுற்றாடல் அமைச்சு மற்றும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் விளக்கமளித் தனர்.

உரிமைகளை வென்றெடுக்க தேவையான சட்ட நடவடிககைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளிடம் கூறினார். (அ)

# ட்ரம்பை விடவும் ஜனாதிபதி அநுர கூடுதலாக வேலை செய்துள்ளார்!

## பிமல் ரத்நாயக்க சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜன. 24

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை விடவும் இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கூடுதலாக வேலை செய்துள்ளார் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப் கடந்த நவம்பர் மாதம் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார், பதவிப் பிரமாணம் செய்து கொள்ளும் வரையில் ஆயத்தமாவதற்கு அவருக்கு கால அவகாசம் இருந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு பதவிப் பிரமாணம் செய்து கொள்வதற்கு 75 நாட்கள் கால இடைவெளி காணப்பட்டதனால் ஆட்சிக்கு தேவையான அரச இயந்திரத்தை உருவாக்க முடிந்தது.

டொனால்ட் ட்ரம்பிடம், ஜனாதிபதி அநுரகுமார பாடம் கற்றுக்கொள்ளவேண்டும் என எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் வாதம் ஏற்புடையதல்ல.

ட்ரம்ப் 75 நாட்களில் செய்யாத வேலைகளை ஜனாதிபதி அநுரகுமார 63 நாட்களில் செய்துள்ளார். ட்ரம்ப் உலக சுகாதார ஸ்தாபனத்தை விட்டு வெளியேறியுள்ளார். இவ்வாறான நடவடிக்கைகளை எதிர்க்கட்சிகள் போற்றக் கூடாது.

சாதாரண மனிதர்களின் பிள்ளைகள் இன்று நாட்டின் முக்கிய ஆட்சிப் பொறுப்புக்களை வகிக்கின்றனர். அதனை வரவேற்க வேண்டுமே தவிர விமர்சனம் செய்யக் கூடாது-என்றார். (அ)

# சம்மி சில்வாவிடம் மண்டியிட்ட விளையாட்டுத்துறை அமைச்சர்

## ஹேஷா விதானகே குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 24

ஊழல் மோசடியால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள கிரிக்கெட் சபையை முதலில் தூய்மைப் படுத்த வேண்டும். ஊழலை இல்லாதொழிப்பதாக குறிப்பிட்ட இந்த அரசாங்கத்தின் விளையாட்டுத்துறை அமைச்சர் கிரிக்கெட் சபையின் தலைவர் சம்மி சில்வாவிடம் மண்டியிட்டுள்ளார். கடந்த அரசாங்கங்களை போன்று இந்த அரசாங்கமும் செயற்பட்டால் கோட்டபய ராஜபக்ஷவின் நிலையே இந்த அரசாங்கத்துக்கும் ஏற்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்-கிளின் சிறிலங்கா செயற்திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமாயின் முதலில் ஊழல்மிக்க இலங்கை கிரிக்கெட் சபையை தூய்மைப் படுத்தவேண்டும். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கடந்த பாராளுமன்றத்தில் கோப் குழுவின் உறுப்பினராகச் செயற்பட்டார். கிரிக்கெட் சபையின் ஊழல் மோசடி பற்றி பேசப்பட்டது.

விளையாட்டுத்துறைச் சட்டத்தின் பிரகாரமே இலங்கை கிரிக்கெட் சபை ஸ்தாபிக்கப்பட்டது.

ஆனால் கிரிக்கெட் சபை பிறிதொரு கிரகத்தில் இருப்பதை போல் செயற்படுகிறது.

கிரிக்கெட் சபையின் மோசடியை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் விளையாட்டுத்துறை சட்டம் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் அந்த முயற்சிக்கு அப்போதைய அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கவில்லை.-என்றார். (அ)

# உண்மையான தேசிய பிரச்னையை அறிந்து அவற்றுக்கு தீர்வு வழங்குக!

## அரசிடம் கோருகிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, ஜன. 24

முச்சக்கரவண்டிகளில் மேலதிக பாகங்களை அகற்றுவதும், உத்தியோகபூர்வ இல்லங்களை கைப்பற்றுவதும் தேசிய பிரச்னை அல்ல. இது அரசியல் பழிவாங்கலாகும். எனவே இவற்றை கைவிட்டு உண்மையான அரசியல் பிரச்னைகளுக்கு தீர்வை வழங்க அரசாங்கம் முன்வர வேண்டும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-இந்த அரசாங்கம் பதவியேற்ற நாள் முதல் வெறுக்கத்தக்க வகையில் அரசியல் பழிவாங்கல்களிலேயே ஈடுபட்டு வருகிறது.

ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்னும் தம்மை எதிர்க்கட்சியினர் என்றே எண்ணிக் கொண்டிருக்கின்றனர்.

கடந்த ஆட்சிகளில் யாராவது ஒருவருடைய சொத்துக்களைப் பிடித்துக் கொண்டு அதனை பிரபலப்படுத்திக் கொண்டு முக்கிய பிரச்னைகளை மறந்து விடுகின்றனர்.

இந்தியாவுடனான ஒப்பந்தங்களை மறந்து விட்டனர். இலங்கை - இந்தியாவுக்கிடையிலான நிலத் தொடர்புகள் மூலம் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் குறித்து அரசாங்கத்தில் எவரும் பேசுவதில்லை.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பினை நீக்குவதும், அவர்களை உத்தியோகபூர்வ இல்லங்களிலிருந்து வெளியேறுமாறு கூறுவதும் நாகரிகமான செயற்பாடு அல்ல. இவர்களுக்கு வாக்களித்த மக்களின் கோரிக்கை இவையல்ல.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த பாரிய உயிர் அச்சுறுத்தலுக்கு மத்தியில் பயங்கரவாதத்தை தோற்கடித்து நாட்டில் அமைதியை நிலைநிறுத்திய தலைவர் என்பதை அனைவரும் அறிவர்.

அவ்வாறான ஒருவருக்கு உயிர் அச்சுறுத்தல் இல்லை என்பதை எவருக்கும் கூற முடியாது. எனவே இவ்வாறான கீழ்தரமான செயற்பாடுகளை தவிர்த்து உண்மையான அரசியல் பிரச்சினைகளுக் தீர்வினை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

முச்சக்கரவண்டிகளில் மேலதிக பாகங்களை அகற்றுவதும், உத்தியோகபூர்வ இல்லங்களை கைப்பற்றுவதும் தேசிய பிரச்னை அல்ல. இது அரசியல் பழிவாங்கலாகும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மத்திய கல்லூரியின் அதிபர் நியமனத்தில் அரசியல் தலையீடு!

## உடன் நிறுத்தக் கோருகிறார் கஜேந்திரகுமார்

கொழும்பு, ஜன. 24

**யாழ். மத்திய கல்லூரி அதிபர் நியமனத்தில் டக்ளஸ் தேவானந்தாவால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் தலையீடு உடன் நீக்கப்படவேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பிரதமர் இப்போது கல்வி அமைச்சராகவும் இருக்கின்றார். அவர் எதிர்க்கட்சியில் அமர்ந்திருந்தபோது, எனக்குப் பின்னால் அமர்ந்திருந்த அவர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தொடர்பாக பிரச்னை ஒன்றை எழுப்பியிருந்தார். இலங்கை அதிபர் சேவைக்கான தகுதியை பெற்றிருந்த ஒருவர் அப்பாடசாலைக்கு அதிபராக முறையாக நியமமிக்கப்பட்டிருந்தபோதும் டக்ளஸின் அரசியல் தலையீடு காரணமாக அவரது நியமனம் இடைநிறுத்தப்பட்டதாகவும் மற்றும் தற்போது அதிபராக உள்ளவர் அப்பாடசாலையின் அதிபராக செயற்படமுடியாதவர் என்றும் அரசியல் தலையீடுகள் நிறுத்தப்படவேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்.

அவர் இப் போது கல்வி அமைச்சராக இருக்கிறார், ஆட்சிக்கு வந்து 100 நாட்கள் ஆகிவிட்டன.

இந்த நாட்டில் இந்த அரசாங் கத்தில் உள்ள மிகவும் சக்தி வாய்ந்த நபர்களில் ஒருவரா கவும் இருக்கிறார்.

எனவே, இதுபோன்ற முறையற்ற செயற்பாடுகளை மாற்றிய மைக்க வேண்டும்.

இறுதியாக,நீதியமைச்சர், அரசியல் கைதிகள் இல்லை என தெரிவித்திருந்தார்.

அரசி யல் கைதிகள் விடுவிக்கப்படு வார்கள் என்று யாழ்ப்பாண உரைகளில் ஜனாதிபதி தெரி வித்திருந்தார். எனவே அரசியல் கைதிகள் விடு விக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

# தேங்காய் இறக்குமதி தீர்மானம் ஏதுமில்லை

கொழும்பு, ஜன. 24

தேங்காய் இறக்குமதி செய்வது தொடர்பில் அரசாங்கம் எந்த முடிவும் எடுக்கவில்லை என்று கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் அவர் இதனை குறிப்பிட்டார்.உற்பத்தித்திறனை அதிகரிக்கத் தவறியதால் இந்தத் தேங்காய்ப் பிரச்சினை எழுந்ததாக அவர் கூறினார்.

சுமார் 800 மில்லியன் தேங்காய் ஏற்றுமதியாளர்கள் தேங்காய் உற்பத்தி இல்லாமல் தவிப்பதாகவும், எனவே அவர்களின் ஏற்றுமதி செயல்முறைக்குத் தேவையான தேங்காய் பால், தேங்காய் எண்ணெய் உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்களைப் பெற தற்காலிகமாகக் கோரியுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர்,அரிசி பிரச்னையைப் போலவே, தேங்காய் பிரச்னையும் உற்பத்தித்திறன் அதிகரிக்கப்படாததால் எழுந்தது.

சுமார் 800 மில்லியன் மதிப்புள்ள தேங்காய் ஏற்றுமதியாளர்களும் தேங்காய்களை இழந்துள்ளனர்.

எனவே, அவற்றின் ஏற்றுமதி செயல்முறைக்குத் தேவையான தேங்காய் பால், தேங்காய் எண்ணெய் உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களை தற்காலிகமாகப் பெறுவதற்கான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. தேங்காய்களை வெளிநாட்டிலிருந்து கொண்டு வருவது குறித்து எந்த தீர்மானமும் எடுக்கப்படவில்லை-என்றார்.

# பாதை தவறிப் பயணிக்கிறது அநுர தலைமையிலான அரசு!

## ஐக்கிய மக்கள் சக்தி சாடல்

கொழும்பு, ஜன. 24

ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசு பாதை தவறிப் பயணிக்கின்றது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்ததாவது:- அரிசி, தேங்காய் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்குகே கையேந்தும் நிலையை இந்த அரசு உருவாக்கியுள்ளது.

மாற்றம் என்று கூறி வந்த இந்த அரசு, வாக்களித்த மக்களை ஏமாற்றி வருகின்றது.

தேர்தல் காலங்களில் தாம் வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் போலியானவை என்பதை அநுர அரசு தற்போது நிரூபித்து வருகின்றது.

இந்த அரசு பாதை தவறிப் பயணிக்கின்றது என்பதே உண்மை. பாதை தவறிப் பயணித்த கோட்டா அரசுக்கு இறுதியில் என்ன நடந்தது என்பதை அநுர அரசு நினைவில்கொள்ள வேண்டும்-என்றார். (அ)

# சுங்கத் தொழிற்சங்க கூட்டணி சி.ஐ.டியில் முறைப்பாடு பதிவு!

கொழும்பு, ஜன. 24

இலங்கைக்கு வந்த 30 சரக்குக் கப்பல்கள், கடந்த காலங்களில் கொள்கலன் அனுமதிக்கு ஏற்பட்டிருந்த தாமதம் காரணமாகத் திருப்பி அனுப்பப்பட்டதாக அண்மையில் முன்வைக்கப்பட்ட கூற்றுக்கு எதிராக சுங்கத் தொழிற்சங்க கூட்டணி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடளித்துள்ளது.

குறித்த முறைப்பாட்டைச் சமர்ப்பித்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட சுங்கத் தொழிற்சங்க கூட்டணியின் தலைவர் அமில சஞ்சீவ, இந்தக் கூற்று குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டதாகவும், கப்பல்களைக் கண்காணிக்கும் ஹார்பர் மாஸ்டர் அலுவலகம், எந்தக் கப்பல்களும் திருப்பி அனுப்பப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ளதாகவும் கூறினார்.

சரக்கு போக்குவரத்துச் சிக்கல்கள் காரணமாகக் கப்பல்கள் பொதுவாக திரும்பிச் செல்லும் செயற்பாடுகள் இடம்பெறுவது வழமையாகும்.

எனினும், கொள்கலன் அனுமதி தாமதம் காரணமாக எந்தக் கப்பலும் திருப்பி அனுப்பப்படவில்லை என அவர் குறிப்பிட்டார்.

இது போன்ற தவறான தகவல்களைப் பரப்பியவர்கள் யார் என்பதை அடையாளம் காண்பதற்கு விரிவான விசாரணையை நடத்துமாறு குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மற்றும் துறைமுக அமைச்சர் உள்ளிட்டோருக்கு இது தொடர்பில் தவறாகக் கருத்துகளைத் தெரிவித்திருப்பார்களாயின் அது குறித்தும் பக்கச்சார்பின்றி விசாரிக்கப்பட வேண்டும் என சுங்கத் தொழிற்சங்க கூட்டணியின் தலைவர் அமில சஞ்சீவ தெரிவித்துள்ளார். (அ)

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்

# ஹேமசிறி, பூஜித் ஜயசுந்தர மீதான வழக்கு மீண்டும் விசாரணைக்கு!

கொழும்பு, ஜன. 24

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பான வழக்குகளிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்த முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் காவல்துறை மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோருக்கு எதிராகச் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று முன் தினம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

புலனாய்வுத் தகவல் கிடைத்திருந்தும், ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதலைத் தடுக்கத் தவறியதன் ஊடாக கடமையைச் செய்யத் தவறியதாக முன்னதாக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கிலிருந்து குறித்த இருவரும் முன்னதாக விடுவிக்கப்பட்டனர்.

அவர்கள் விடுவிக்கப்பட்டமைக்கு எதிராகச் சட்டமா அதிபரால் மொழிமூல சாட்சியங்களை அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

அதன்படி, சம்பந்தப்பட்ட வழக்கு நேற்று முன் தினம் மேல்நீதிமன்ற நீதியரசர்களான நாமல் பலல்லே மற்றும் மொஹமட் இர்ஷதீன் ஆகியோர் அடங்கிய ஆயம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதற்கமைய, அண்மையில் உயர் நீதிமன்றத்தினால் அறிவிக்கப்பட்ட வழக்குத் தீர்ப்பு, பிரதிவாதிகளுக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டதுடன் வழக்கு 28 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது. (அ)

# அதிசொகுசு இல்லங்கள் அமைச்சர்களுக்கு இல்லை

கொழும்பு, ஜன. 24

அமைச்சர்களுக்கு அதிசொகுசு உத்தியோகப்பூர்வ இல்லங்கள் வழங்கப்படுவதை இடைநிறுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அவ்வாறான 30 இல்லங்கள் தொடர்பில் தற்போது மதிப்பீட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக உத்தியோகபூர்வ இல்லங்களாக அமைச்சுக்களின் கீழுள்ள 20 இல்லங்கள் தொடர்பாக மாவட்ட மட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 15 பங்களாக்கள் தொடர்பிலும் மதிப்பீடு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

குறித்த நடவடிக்கைகளின் பின்னர் அதிசொகுசு இல்லங்களை எதற்கு பயன்படுத்துவதென தீர்மானிக்கப்படும் என்று அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன குறிப்பிட்டார்.

சுற்றுலா தொழிற்துறையை மேம்படுத்தல் உள்ளிட்ட பயனுள்ள செயற்பாடுகளுக்காக குறித்த இல்லங்களை பயன்படுத்த அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக அவர் கூறினார். (அ)

# 50 மெற்றிக் தொன் பேரீச்சம்பழம் நன்கொடையாக வழங்கிய சவூதி

கொழும்பு, ஜன. 24

எதிர்வரும் ரமழான் நோன்பு காலத்தில் முஸ்லிம் பக்தர்களின் நுகர்வுக்காக சவுதி அரேபியா 50 மெற்றிக் தொன் பேரீச்சம் பழங்களை இம்முறை நன்கொடையாக வழங்கியுள்ளது.

பேரீச்சம்பழங்கள் நாட்டுக்கு கிடைத்துள்ளதாக தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் முனீர் முளவர் கூறினார்.

அவற்றை பள்ளிவாசல்களுக்கு விநியோகிக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் குறிப்பிட்டார்.

இம்முறை ஹஜ் கடமைக்காக 3,500 இலங்கையர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான ஒப்பந்தத்தில் இலங்கை அரசாங்கமும் சவுதி அரசாங்கமும் அண்மையில் கையெழுத்திட்டதாக தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் முனீர் முளவர் தெரிவித்தார்.

இதற்கமைய எதிர்வரும் ஜூன் முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ள யாத்திரீகர்கள் ஹஜ் கடமையை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அனுமதி வழங்கப்பட்டுள்ள ஹஜ் யாத்திரீகர்களுக்கான சகல வசதிகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதி அமைச்சர் முனீர் முளவர் கூறியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டத்தில் புறக்கணிக்கப்படுகிறது தமிழ்மொழி!

## சத்தியலிங்கம் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 24

**கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டத்தின் ஊடாக முன்னெடுக்கப்படும் சில விடயங்களில் தமிழ்மொழி புறக்கணிக் கப்படுவதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப் பினர் பா.சத்தியலிங்கம் குற்றம்சாட்டியுள்ளார்.**



கிளீன் சிறிலங்கா வேலைத் திட்டம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அதேநேரம், இந்த வேலைத்திட்டத்தின் கீழ் அனைத்து மதங்களுக்கும் மதிப் பளிக்கும் வகையில் மத நல்லிணக்க அமைச்சு உருவாக்கப் படவேண்டும் எனவும் இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பா. சத்தியலிங்கம் வலியுறுத்தினார்.

இதற்கு பதிலளித்த அமைச் சரும் சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்க, அது தொடர்பில் உரிய வகையில் ஆராய்ந்து தீர்வை வழங்குவதாகத் தெரிவித்தார். (அ)

# வீதி விபத்துக்களை குறைக்க புதிய திட்டம்!

கொழும்பு, ஜன. 24

புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கொழும்பில் போக்குவரத்து விதிமீறல்களில் ஈடுபடும் சாரதிகளை அடையாளம் காணும் புதிய மென்பொருள் ஒன்றை இலங்கை பொலிஸார் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இந்த புதிய திட்டம் வீதி விபத்துகளைக் குறைக்கும் மற்றும் போக்குவரத்து விதிமீறல்களில் ஈடுபடும் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்பார்க் கப்படுகிறது.

புதிய மென்பொருளை அறிமுகப்படுத்தும் நிகழ்வு பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தலைமையில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

இந்த புதிய மென்பொருளின் மூலம் கொழும்பு நகரில் போக்குவரத்து விதிமீறல்களில் ஈடுபடும் சாரதிகள் கொழும்பில் உள்ள பிரதான சி.சி.ரி.வி செயற்பாட்டு அறையின் மூலம் கண்காணிக்கப்படுவார்கள்.

அதன் பின்னர், சாரதி வசிக்கும் பொலிஸ் நிலையத்தில் உள்ள பொலிஸாரிடம் குற்றம் முறைப்பாடு அளிக்கப் பட்டு, அதற்கான அபராதம் சாரதிக்கு விதிக்கப்படும். (அ)

# ஈ-ரிக்கெற் பெரும் மோசடி கண்டியில் ஒருவர் கைது!

கொழும்பு, ஜன. 24

கண்டி பிரதேச குற்றத்தடுப் புப் பிரிவினர், எல்ல உட்பட மலையக ரயில் மார்க்கங்களுக்காக விற்கப்படும் ஈ-ரிக் கெற் தொடர்பான பெரும் மோசடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 37 வயதுடைய சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

கண்டி பொலிஸ் பிரிவுக்குட் பட்ட சுடுஹும்போல பகுதியில் நேற்று முன் தினம் மாலை சந்தேக நபர் கைது செய்யப் பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஒடிசி ரயிலுக்கு ஒன்லைனில் கொள்வனவு செய்யப்பட்ட 21 ரயில் ஈ-ரிக்கெற்கள், ரயில் ரிக் கெற் விற்பனை மூலம் சம்பாதித்ததாக சந்தேகிக்கப்படும் 130,670 ரூபாய் ரொக்கப் பணம், ரயில் ரிக்கெற் விற் பனை விவரங்கள் பதிவு செய் யப்பட்ட 130 நோட்டு அட் டைகள், மொபைல் போன் ஆகியவற்றை இவரிடமிருந்து பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக குற்றப் புலனாய் வுப் பிரிவினரிடம் ஒப்படைக் கப்பட்டார்.

பிரபல சுற்றுலாப் பாதைகளுக்கான ஈ-ரிக்கெற்கள் ஒன் லைனில் வெளியிடப்பட்ட 42 வினாடிகளில் வியக்கத்தக்க வகையில் விற்றுத் தீர்ந்ததாகக் கூறப்படும் சம்பவம் குறித்து விசாரணையைத் தொடங்கியுள்ளதாக சி.ஐ.டியினர் கொழும்பு நீதிவான் நீதிமன்றத் தில் தெரிவித்தனர்.

சில குழுக்கள் சந்தேகத்துக்கு இடமான முறையில் அனைத்து ஈ-ரிக்கெற்களையும் வாங்கி சுற்றுலா பயணிகளுக்கு அதிக விலைக்கு மறு விற்பனை செய் வதாகவும் குற்றம் சாட்டப் பட்டது.

குறிப்பாக 2,000 ரூபாவான ஈ-ரிக்கெற் விலை மறுவிற்பனை மூலமாக 16,000 ரூபாவுக்கு விற் பனை செய்யப்பட்டமை யும் கண்டறியப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரஷ்யா இராணுவத்தில் பலவந்தமாகச் சேர்க்கப்பட்ட இலங்கை இளைஞர்கள் உயிருடன் இருக்கின்றனரா?

## கேள்வியெழுப்பினார் சிறீதரன் எம்.பி.

கொழும்பு, ஜன. 24

இலங்கைப் பிரஜைகளான இளைஞர்கள் பலர் சட்ட ரீதியாகவும் சட்டத்திற்கு முரணான வகையிலும் வெளிநாட்டிற்கு செல்லும் போது வெளிநாட்டு முகவர்களால் ஏமாற்றப் படும் சம்பவங்கள் பல தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இவ்வாறு ஏமாற் றப்பட்ட இளைஞர்கள் பலர் ரஷ்ய இராணுவத்தில் இணைக் கப்பட்டுள்ளனர்.



இந்நிலையில், அவர்கள் உயிருடன் இருக் கின்றனரா என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாரா ளுமன்ற உறுப்பினர் சிவஞா னம் சிறீதரன் பாராளுமன்றில் நேற்று முன் தினம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த வெளிவிவகார பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர,வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கள் என்ற அடிப்படையில் இராஜ தந்திர ரீதியாக அணுகி வரும் நிலையில், இதற்காக ஒருவார கால அவகாசம் வழங்குமாறும் கேட்டுக் கொண்டார். (அ)

# நாமல் எம்.பிக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பம்!

கொழும்பு, ஜன. 24

நிதி முறைகேடு தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராகப் பிரத்தியேக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக கையூட்டலுக்கு எதிரான விசாரணை ஆணைக்குழு கோட்டை நீதவான் நிலுபுல் லங்கா புர வுக்கு அறியப்படுத்தியுள்ளது.

கொழும்பு கோட்டையில் உள்ள கிரிஷ் டிரான்ஸ்வர்ட் சதுக்கத்தில், 4.3 ஏக்கர் பகுதி குத்தகைக்கு வழங்கப்பட்ட போது 70 மில்லியன் ரூபாய் நிதி முறைக்கேடு செய்யப்பட் டமை தொடர்பில் பாராளு மன்ற உறுப்பினர் நாமல் ராஜ பக்ஷவுக்கு எதிராக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குற்றப்புலனாய்வு திணைக்களம் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக எதிர் வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி அழைக்கப்படும் எனவும் சட்டமா அதிபரின் ஆலோசனை அதற்கு முன்னதாக கிடைக்காவிடின் அறிவித்தல் அனுப்பப்படும் எனவும் நீதிவான் அறிவித்தார்.

ஊழலுக்கு எதிரான குரல் என்ற அமைப்பினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள அதே வேளை, குறித்த சம்பவம் தொடர்பான அறிக்கையும் மன் றில் சமர்ப்பிக்கப்பட்டது. (அ)

# உள்ளூராட்சிசபைத் தேர்தல் சிறப்பு ஏற்பாட்டு சட்டமூலத்துக்கு எதிரான மனு விசாரணைக்கு!

கொழும்பு, ஜன. 24

பாராளுமன்ற ஒப்புதலுக் காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர் தல்கள் சிறப்பு ஏற்பாடுகள் சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரணானது என்று தீர்ப்பளிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை இன்று விசாரிக்க உயர் நீதிமன் றம் நேற்று முன் தினம் உத்தர விட்டது.

இந்த மனுவை முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் சமர்ப்பித் தார். இந்த மனு, யசந்த கோட் டகொட, ஜனக் டி சில்வா மற் றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவர் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த மனுவை இன்று வெள் ளிக்கிழமை விசாரிக்க ஆயம் உத்தரவிட்டது.

இந்த சட்டமூலம், வரவிருக் கும் உள்ளூராட்சித் தேர்தலுக் காக கோரப்பட்ட வேட்பும னுக்களை ரத்து செய்ய சமர்ப் பிக்கப்பட்டுள்ளதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டமூலத்தில் சேர்க்கப்பட் டுள்ள சில விதிகள் மக்களின் வாக்களிக்கும் உரிமையைப் பாதிக்கின்றன என்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இது மக் களின் அடிப்படை மனித உரி மைகளை மீறுவதா கவும் மனு வில்குறிப்பிடப்பட் டுள்ளது.

அதன்படி, தொடர்புடைய சட்டமூலங்கள் நிறைவேற்றப் பட வேண்டுமானால், அவை பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப் பட்டு, வாக்கெடுப்பு மூலம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று மனு கோருகிறது. (அ)

# ரணிலுக்கு நன்றி கூறினார் அநுர!

கொழும்பு, ஜன. 24

அரசாங்கம் வழங்கிய இல்லத்தை ஏற்க மறுத்தமைக் காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க நன்றி தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிக ளுக்கு வழங்கப்பட்டுள்ள ஆடம்பர உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களினால் அரசாங் கத்துக்கு ஏற்படும் இழப்புகள் குறித்து கருத்துத் தெரிவித்த போதே ஜனாதிபதி இதனை கூறினார்.

இதன்போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க, அரசாங்கம் வழங்கிய வீட்டிலேயே வசிப்பதாகவும், அந்த வீட்டின் மாதாந்த வாடகை பெறுமதி 2 மில்லியன் ரூபாய் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அத்துடன் முன்னாள் ஜனா திபதி மைத்திரிபால சிறிசேன வுக்கு வழங்கப்பட்டுள்ள வீட் டுக்கு 0.9 மில்லியன் ரூபா செல விடப்படுகின்றது எனவும் முன் னாள் ஜனாதிபதி மகிந்த வசிக் கும் வீட்டின் வாடகை பெறு மதி மாதம் 4.6 மில்லியன் என் றும் ஜனாதிபதி கூறினார்.

எனினும் சில தலைவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட விசேட சலுகைகளை மீள ஒப்ப டைத்துள்ளதாக அநுரகுமார தெரிவித்தார்.

அந்தவகையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய தனது உத்தியோகபூர்வ இல்லத்தை சமீபத்தில் மீளக் கையளித்துள் ளார் எனவும் ,ரணசிங்க பிரேம தாஸவின் மனைவியான ஹேமா பிரேமதாஸவும் தனக்கு வழங் கப்பட்ட வீட்டை சில காலத் துக்கு முன்னர் திருப்பி ஒப்ப டைத்துள்ளார் எனவும் ஜனா திபதி தெரிவித்தார். (அ)

# பாராளுமன்றத்தில் உணவுகளின் விலையை உயர்த்தும் அரசு!

கொழும்பு, ஜன. 24

பாராளுமன்ற உறுப்பினர் களின் உணவுகளின் விலைகள், தற்போதைய செலவின் அடிப் படையில் அறிமுகப்படுத்தப் படவுள்ளது. காலை உணவு, மதிய உணவு மற்றும் மாலை தேநீர் உள்ளிட்ட உணவுக ளுக்கு ரூ. 3,000 செலவாகும் என்று சபைத் தலைவர் பிமல் ரத்நாயக்க அறிவித்தார்.

இந்த திட்டம் பாராளு மன்றத்தில் சபை பராமரிப்பு குழுவில் சமர்ப்பிக்கப்படும் என்றும், விரைவில் அமைச் சரவையிலும் ஒரு திட்டம் சமர்ப்பிக்கப்படும் என்றும் ரத்நாயக்க கூறினார்.

"காலை உணவு, மதிய உணவு மற்றும் மாலை தேநீர் உள்ளிட்ட உணவுகளுக்கு எம். பிக்கள் ரூ. 3,000 செலுத்த வேண்டியிருக்கும். மற்றவர்க ளுக்கும் உணவு விலை அதிகரிக் கப்படும்" என்று அவர் மேலும் கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுர அரசால் முஸ்லிம்கள் தொடர்ந்தும் புறக்கணிப்பு

## இம்ரான் எம். பி. குற்றச்சாட்டு

திருகோணமலை, ஜன.24

**அரசாங்கம் அடுத்தடுத்து முஸ்லிம்களை புறக்கணித்து வருகின்ற போதிலும் அரசிலுள்ள முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதுகுறித்து கவனம் செலுத்தாது மௌனமாக இருப்பது முஸ்லிம் சமூகத்தில் கவலையை ஏற்படுத்தியுள்ளது என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.**



இது தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் மேலும் கூறுகையில், "அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் முஸ்லிம்கள் புறக்கணிப்பு விடயத்தில் தற்போது உயர் நீதிமன்ற நீதியரசர்கள் நியமனம் பேசுபொருளாகியுள்ளது. சிரேஷ்டத்துவ அடிப்படையில் முன்னிலையிலிருந்த ஒருவரை விடுத்து புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இந்த விடயங்கள் ஊடகங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இவர் முஸ்லிம் என்ற காரணத்துக்காக விடப்பட்டுள்ளார் என்ற குற்றச்சாட்டுள்ளது. நீதித்துறை நியமனங்களில் கூட முஸ்லிம் சமூகத்துக்கு நீதியில்லை என்றால் இந்த அரசாங்கத்தில் முஸ்லிம்கள் எப்படி நியாயமான செயல்பாடுகளை எதிர்பார்க்க முடியும் என்று கேட்க விரும்புகிறேன்.

இந்த அரசாங்கத்தில் முஸ்லிம்கள் அடுத்தடுத்து புறக்கணிக்கப்படுகின்ற போதிலும் அரசாங்கத்திலுள்ள முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவை குறித்து இதுவரை எதுவும் பேசாது மௌனம் காப்பது முஸ்லிம் சமூகத்தில் பெருங்கவலையை ஏற்படுத்தியுள்ளது.

அரசாங்கம் கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டம் குறித்து இப்போது பேசுகின்றது. அனைத்து மக்களுக்கும் சம உரிமை வழங்குதல் மற்றும் ஏற்றாத்தாழ்வுகளை ஒழித்தல் என இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அநுர அரசாங்கத்தின் இதுபோன்ற புறக்கணிப்பு செயல்பாடுகளைப் பார்க்கும் போது எங்கே சம உரிமை உள்ளது.

எப்படி ஏற்றத்தாழ்வு களை ஒழிக்க முடியும் என்பதை சிந்திக்க வேண்டியுள்ளது.

எந்தத் திட்டமும் கடதாசியில் இருக்கலாம். அது வாசிப்பதற்கு திருப்தியாகத் தான் இருக்கும். நடைமுறையில் அது இல்லை என்றால் அதனால் என்ன பயன் ஏற்படும் என்பதையும் கேட்க விரும்புகிறேன்.

எனவே, இந்த அரசாங்கமும் கோட்டாயயவின் முஸ்லிம் விரோத வழியில் பயணிப்பதான சந்தேகமே இப்போது அனைவருக்கும் ஏற்பட்டுள்ளது"- என்றார். (எ)

# விவேகானந்த பூங்காவில் பணிக்கு பாராட்டு நிகழ்வு



மட்டக்களப்பு,ஜன.24

உலகெலாம் ஜீவசேவை ஆற்றிவரும் இராமகிருஷ்ண மிஷனை ஸ்தாபித்த சுவாமி விவேகானந்தரின் 163ஆவது ஜெயந்தி தினத்தையொட்டி, அவர் பெயரில் ஆரம்பித்த கிரான் குளம் விவேகானந்த பூங்காவில் பணிக்கு பாராட்டு எனும் நிகழ்வு நடைபெற்றது வருகிறது.

விவேகானந்த பூங்கா பணிக்கு உதவி வழங்குகின்றவர்களை அல்லது அவர்களது பெற்றோர்களை விசேட தினங்களில் கௌரவிப்போம் என்ற செயல்திட்டத்தை விவேகானந்த பூங்கா ஸ்தாபகர் கந்தப்பன் சற்குணேஸ்வரன் முன்னெடுத்து வருகிறார்.

அந்த வகையில் சுவாமி விவேகானந்தரின் 163 ஆவது ஜனன தினத்தில் நாவிதன்வெளியைச் சேர்ந்த திருமதி சேத்ரபதி சிதம்பரபிள்ளை மற்றும் அவரது குடும்பத்தினர் கௌரவிக்கப்பட்டனர்.

லண்டனில் உள்ள சிதம்பரப்பிள்ளைதேவகாந்தன் பூங்காவில் ஒரு கட்டடத்தை அமைக்க உதவியிருந்தார்.

அதற்காக அவரது தாயார் கௌரவிக்கப் பட்டார். (எ)

# அண்ணனைக் குத்தி கொலை செய்த தம்பி

மட்டக்களப்பு, ஜன.24

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிறைந்துறைச்சேனை பகுதியில் உடன் பிறந்த சகோதரனான அண்ணன் வீட்டுக்கு நேற்று முன்தினம் காலை சென்ற தம்பி, அவர் மீது கத்திக் குத்து தாக்குதல் நடத்தியதில் அண்ணன் உயிரிழந்ததுடன், தம்பி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

பிறைந்துறைச்சேனை சாதுலியா பாடசாலை வீதியைச் சேர்ந்த 43 வயது நபரே சம்பவத்தில் உயிரிழந்தார்.

குறித்த இரு சகோதரர்களுக்கு இடையே ஏற்பட்ட பணம் கொடுக்கல் வாங்கல் முரண்பாட்டையடுத்து சகோதரனின் வீட்டுக்கு சம்பவதினமான நேற்று முன்தினம் காலை 09.30 மணிக்கு சென்ற தம்பி, அண்ணன் மீது கத்தியால் குத்தி தாக்குதல் நடத்தியதையடுத்து அவர் படுகாயமடைந்ததார்.

பின்னர் அவரை மருத்துவமனையில் சேர்த்த போதும், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்த நிலையில், தாக்குதலை நடத்திய தம்பி அங்கிருந்து தப்பியோடியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. (எ)

# ஆடு, மோட்டார் சைக்கிள் திருடிய இருவர் சிக்கினர்

சம்மாந்துறை,ஜன.24

ஆடு மற்றும் மோட்டார் சைக்கிள் போன்றவற்றை மருதமுனை பகுதியில் திருடி சம்மாந்துறை பகுதியில் விற்பனை செய்ய வருகை தந்த சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்தனர்.

இந்தச் சம்பவம் அம்பாறை, சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

மேலும், சந்தேக நபர்கள் வசமிருந்து அவர்கள் விற்பனைக்காக கொண்டு வந்த மூன்று ஆடுகள், இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஐஸ் போதைப் பொருள் என்பன மீட்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# களுவாஞ்சிக்குடியில் கிளீன் சிறீலங்கா திட்டம்

மட்டக்களப்பு,ஜன.24

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான "கிளீன் சிறீலங்கா" திட்டம் தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

"அழகான நாடு புன்னகைக்கும் மக்கள்" எனும் கருத் திட்டத்தின் கீழ் "கிளீன் சிறீலங்கா" திட்டம் தொடர்பில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு தெளிவூட்டும் கலந்துரையாடல் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது "கிளீன் சிறீலங்கா" திட்டத்தின் முக்கிய அம்சங்களான சூழல்சார் நிலைபேறானதன்மை, சமூக திறன் மேம்பாடு, ஆட்சி நிலைபேறானதன்மை மற்றும் பொருளாதார நிலைபேறானதன்மை ஆகியனவற்றை மேம்படுத்தல் தொடர்பாகவும், அவற்றை அடைவதற்கான இலக்குகள் மற்றும் செயல்பாடுகள் தொடர்பாகவும் உத்தியோகத்தர்களுக்கு தெளிவூட்டப்பட்டது.

அத்துடன் "கிளீன் சிறீலங்கா" திட்டத்தின் அடிப்படையான விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. மேலும் அரசாங்க உத்தியோகத்தர்கள் அனைவரும் பொது மக்களின் நோக்கங்களை பூர்த்தி செய்வதற்கு அர்ப்பணிப்புடன் வினைத்திறனாக பணியாற்ற வேண்டும் எனவும் பிரதேச செயலாளரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.(எ)

# கிராம உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வு கலந்துரையாடல்

காரைதீவு, ஜன.24

இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை செயல்பாடு தொடர்பில் காரைதீவு பிரதேச செயலகத்தின் கீழ் கடமையாற்றும் கிராம உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வு கலந்துரையாடல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

காரைதீவு பிரதேச செயலாளர் ஜி. அருணனின் வழிகாட்டுதல்களுக்கு அமைவாக காரைதீவு உதவி பிரதேச செயலாளர் எஸ். பார்த்திபனின் தலைமையில் ஆட்பதிவு திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் நடத்தப்பட்டது. (எ)

# பிரதேச செயலாளர் உடன் நியமிக்கப்பட வேண்டும்

பொத்துவில், ஜன.24


பொத்துவில் பிரதேச செயலாளர் வெற்றிடம் கடந்த 7 மாத காலமாக நிரப்பப்படாமல் உள்ளதால் அப்பிரதேச மக்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்றும் அப்பிரதேச செயலகத்துக்கு நிரந்தர பிரதேச செயலாளர் ஒருவரை உடனடியாக நியமிக்குமாறு அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். உதுமாலெப்பை, பொது நிர்வாக உள்நாட்டு அலுவலகங்கள் அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# கல்முனை பள்ளிவாசல் கடலரிப்பால் பாதிப்பு

கல்முனை, ஜன.24

கடலரிப்பு காரணமாக கல்முனை மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளிவாசல் எல்லைச் சுவர்கள் இடிந்து விழுந்தன. அண்மையில் ஏற்பட்ட காலநிலை மாற்றத்தால் தொடர்ந்து கடலரிப்பு தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு கரையோரம் பேணல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் சுற்றாடல் அதிகார சபை உள்ளிட்ட அரச நிறுவனங்கள் அவசர நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமென பள்ளிவாசல் நிர்வாகிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். மேலும், கல்முனை மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளிவாசல் பின்புறமாக அமைக்கப்பட்ட தென்னந்தோட்டமும் கடலரிப்பால் பாதிக் கப் பட்டுள் ளது. அங் குள்ள சில தென் னை மரங் களும் விழுந்துள் ளன. இது தவிர கடல் சீற்றம் கார ணமாக இப்பகுதிகள் கடலரிப்புக்குள்ளாகி பாரிய சேதங்களுக்கு உள்ளாகி வருகின்றன. அம்பாறை மாவட் டத்தின் குறிப்பாக கல் முனை, பெரிய நீலாவணை, சாய்ந்த மருது, மருதமுனை, பாண்டிருப்பு, அட்டாளைச் சேனை, நிந்தவூர், ஒலுவில் போன்ற பிரதேசங்களில் காற்றின் வேகம் அதிகரிப்பு, காற்றின் திசை மாற்றம், நீரோட் டத்தில் ஏற்பட் டுள்ள திசை



மாற்றம், கடல் நீரின் தன்மை வழமைக்கு மாறாக குளிர்ச்சியாக காணப்படுகின்ற காரணங்களால் கடல் கொந்தளிப்பான நிலையில் காணப் படுவதினாலும் கடல ரிப்பு மிக கோரமாக காணப்படுகின்றது. மீனவர்களும் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# அமெரிக்காவில் பனிப்புயல் இதுவரை 13 பேர் உயிரிழப்பு

## 2,100 விமானங்கள் இரத்து

நியூயோர்க், ஜன.24

**அபாயகரமான பனிப்புயல் காரணமாக அமெரிக்கா முழுவதும் இதுவரை 13 பேர் உயிரிழந்தனர்.**



அமெரிக்காவின் பல்வேறு மாகாணங்களில் சில நாட்களாக பனிப்புயல் கடும் தாக்கம் ஏற்படுத்தி வருகிறது. இதனால் டெக்சாஸ், லூசியானா, மிசிசிப்பி, அலபாமா, ஜார்ஜியா, தென் கரோலினா மற்றும் புளோரிடா மாகாணங்களின் பல பகுதிகளில் 10 அங்குலம் அளவிலான பனிப்பொழிவும் காணப்படுகிறது.

அந்த நாட்டில் 62 ஆண்டுகளில் இல்லாத வகையில், பனிப்புயல் பாதிப்பால் 2,100 இற்கும் மேற்பட்ட விமானங்கள் இரத்து செய்யப்பட்டன. அடர்பனியால் டெக்சாஸ் மற்றும் ஜார்ஜியா மற்றும் மில்வாகீ, புளோரிடா உள்ளிட்ட அமெரிக்காவின் முக்கிய நகரங்களில் இதுவரை 13 பேர் உயிரிழந்துள்ளனர். நான்கு மாநிலங்களில் 1,20,000க்கும் மேற்பட்டோருக்கு மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஹிஸ்புல்லா அமைப்பின் தளபதி சுட்டுக்கொலை!

பெய்ரூட், ஜன.24

லெபனானில் ஹிஸ்புல்லா அமைப்பின் மூத்த தளபதி ஷேக் முகமது அலி ஹமாதி, மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஈரான் ஆதரவுடன் லெபனானில் இயங்கி வரும் ஹிஸ்புல்லா அமைப்பு, இஸ்ரேல் - காஸா போரில் ஹமாஸ் அமைப்பினருக்கு ஆதரவு தெரிவித்து இஸ்ரேல் மீது தொடர் தாக்குதல் நடத்தி வந்தது. தற்போது இஸ்ரேல் - காஸா இடையே போர் நிறுத்தம் அமுலுக்கு வந்துள்ள நிலையில், ஹிஸ்புல்லா அமைப்பின் மூத்த தளபதி மர்ம நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஷேக் முகமது அலி ஹமாதி, அமெரிக்காவின் எப். பி. ஐ. அமைப்பால் தேடப்பட்டு வந்த நபர் ஆவார். இவர் கடந்த 1985 ஆம் ஆண்டு 153 பயணிகளுடன் ரோம் நகரில் இருந்து ஏதென்ஸ் நோக்கி சென்ற விமானத்தை கடத்தி, அதில் ஒரு



அமெரிக்கரை கொலை செய்த சம்பவத்தில் முக்கிய குற்றவாளியாக கருதப்படுகிறார்.

இந்த நிலையில், கிழக்கு லெபனானில் உள்ள பெக்கா பள்ளத்தாக்கு பகுதியில் வசித்து வந்த ஷேக் ஹமாதி, தனது வீட்டின் முன்பு மர்ம நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். அவர் மீது ஆறு தோட்டாக்கள் பாய்ந்ததாகவும், சம்பவ இடத்திலேயே ஷேக் ஹமாதி உயிரிழந்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

குடும்ப பிரச்னை காரணமாக இந்தக் கொலை நடந்துள்ளதாக அந்த நாட்டு ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. (எ)

# எச் 1 பி வீசா நடைமுறை அமெரிக்காவில் நீடிக்கும்

வாஷிங்டன், ஜன.24

அமெரிக்காவின் வளர்ச்சிக்கு மிகவும் திறமையான வெளிநாட்டினரின் பங்களிப்பு தேவை என்பதால் எச் 1 பி வீசா நடைமுறையை நிறுத்த விரும்பவில்லை என்று ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் தொழில்நுட்ப நிறுவனங்களின் தலைமை நிர்வாகிகளுடன் உரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேலும், "அமெரிக்காவுக்கு மிகவும் திறமை வாய்ந்த இளைஞர்கள் தேவை. நான் பொறியியலாளர்களை பற்றி மட்டும் பேச வில்லை.

எல்லா மட்டத்திலும் உள்ள மக்களைப் பற்றி பேசுகிறேன். தொழில்நுட்பத் துறை



மட்டுமின்றி பிற வேலைகளுக்கும் திறமையான உயர்தர பணியாளர்களுக்கு எச் 1 பி வீசா என்பது மிக அவசியமாகவுள்ளது. தகுதி இல்லாத மற்றவர்களுக்கு பயிற்சி அளிப்பதும் இந்த வீசாவின் நோக்கம் என்றாலும் அதிக திறமையானவர்கள் அமெரிக்காவுக்கு வரவேண்டும் என்பதே எனது விருப்பம்"- என்றார். (எ)

# ஹோட்டலில் தீ 76 பேர் மரணம்

அங்காரா, ஜன.24

துருக்கி ஹோட்டலில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 76 ஆக அதிகரித்தது.

இந்த ஹோட்டலில் எதிர்பாராத விதமாக பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் 66 பேர் உயிரிழந்ததாகவும், 51 பேர் படுகாயமடைந்ததாகவும் முன்னர் தகவல் வெளியாகினது.

இந்த நிலையில், சிகிச்சை பலனின்றி மேலும் சிலர் உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதனால் பலியானவர்களின் எண்ணிக்கை 76 ஆக உயர்ந்தது. அவர்களில் 45 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், மற்றவர்களை அடையாளம் காணும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# லொஸ் ஏஞ்சல்ஸில் மீண்டும் காட்டுத்தீ

## 30,000 பேர் வெளியேற்றம்

லொஸ் ஏஞ்சல்ஸ், ஜன.24

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் மீண்டும் காட்டுத் தீ பரவத் தொடங்கியுள்ள நிலையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அங்கிருந்து 30 ஆயிரத்துக்கும் அதிகமான மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு செல்லும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கலிபோர்னியா மாகாணத்தின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரத்தில் அண்மையில் பயங்கர காட்டுத்தீ பரவியது. இதுவரை 40இற்கும் மேற்பட்டோர் இந்தப் பேரிடரால் உயிரிழந்தனர். 12,000 கட்டடங்கள் உட்படப் பல கட்டுமானங்கள் சேதமடைந்தன. ஒர் இலட்சத்து 80 ஆயிரம் பேர் வேறு இடத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். 163 சதுர கிலோமீற்றர் பரப்பளவு தீக்கிரையானது. 200 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான பொருள் சேதம் ஏற்பட்டது.

இந்த நிலையில், சற்று தணிந்த காட்டுத்தீ தற்போது மீண்டும் வேகமாக பரவத் தொடங்கியுள்ளது. லொஸ் ஏஞ்சல்ஸ் நகரின் வடக்குப் பகுதியில் தீ பரவி வருகிறது. இப்போது மூண்டுள்ள காட்டுத்தீ 21 சதுர கிலோமீற்றர் அளவில் எரிந்து வருகிறது. இதனால் விண்ணை முட்டும் அளவுக்கு கரும்புகை சூழ்ந்துள்ளது. (எ)

# வரி பிரச்னைக்குத்தீர்வு மோடி - ட்ரம்ப் சந்திப்பு

புதுடில்லி, ஜன.24

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றுள்ள நிலையில், அந்த நாட்டுடனான வர்த்தக உறவுகளை மேம்படுத்தவும், இந்தியாவில் இருந்து அமெரிக்கா செல்லும் திறமையான தொழிலாளர்களுக்கு எளிதில் வீசா கிடைக்கச் செய்வதிலும் இந்தியா ஆர்வமாகவுள்ளது.

கடந்தாண்டில் இரு நாடுகள் இடையேயான வர்த்தகம் 118 பில்லியன் அமெ ரிக்க டொலரை எட்டியது.

இந்த நிலையில், அமெரிக்க பொருட்களுக்கு அதிக வரி விதிக்கும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று என குறிப்பிட்டுள்ள ட்ரம்ப், இந்திய பொருட்களுக்கும் அதேபோல் வரி விதிக்கப்படும் எனக் கூறியுள்ளார்.

இதையடுத்து, ட்ரம்ப் - மோடி விரைவில் சந்தித்து பேசினால் வரி பிரச்னைகளுக்குத் தீர்வு காணப்படும் என்றும், அமெ ரிக்க முதலீடுகளை ஈர்க்க உத வும் எனவும் இந்திய வெளிவிவகாரத் துறை அதிகாரிகள் நம்புகின்றனர்.

அடுத்த மாதம் ட்ரம்ப் - மோடி சந்திப்புக்கான ஏற்பாடுகளை செய்ய இரு நாட்டுத் தூதரக அதிகாரிகளும் முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இந்திய வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் இந்த சந்திப்புக்கான பணிகளில் ஈடுபட்டுள்ளார். (எ)

# சட்டவிரோத குடியேறிகளை வெளியேற்றுவதற்கு ஆதரவு

## அமெரிக்காவில் கூறிய இந்திய அமைச்சர்

வாஷிங்டன், ஜன.24

சட்டவிரோதமாக குடியேறிய இந்தியர்களை வெளியேற்றும் விவகாரத்தில் அமெரிக்காவின் நடவடிக்கையில் உடன்படுவதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ட்ரம்ப் பதவியேற்பு விழாவில் பங்கேற்கச் சென்ற ஜெய்சங்கர் வாஷிங்டனில் உள்ளார்.

புதிய நிர்வாகம் பதியேற்றவுடன் அமெரிக்கா, இந்தியாவுக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை குறிக்கும் வகையில் அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோர் தங்களின் முதல் இருதரப்பு சந்திப்பை இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருடன் நடத்தினர்.

இந்தச் சந்திப்பையொட்டி செய்தியாளர்களை சந்தித்த ஜெய்சங்கர், சட்டவிரோதமாக குடியேறிய இந்தியர்களை வெளியேற்றும் விவகாரத்தில் அமெரிக்காவின் நடவடிக்கையுடன் உடன்படுவதாகத் தெரிவித்துள்ளார். அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியிருக்கும் மக்களில், இந்தியர்கள் இருந்தால், அவர்கள் இந்தியர்கள்தான் என்பது உறுதியானால் அவர்களுக்காக இந்தியாவின் கதவுகள் எப்போதும் திறந்திருக்கிறது. இந்தியாவின் இந்த நிலைப்பாடு அமெரிக்



காவுக்கு மட்டுமே பிரத்தியேகமானது அல்ல. உலகின் பல்வேறு நாடுகளிலும் இந்தியர்கள் உள்ளனர். எந்த நாடாக இருந்தாலும் அங்கே சட்டவிரோத குடியேற்றம் என்பது பல்வேறு சிக்கல்களுக்கு வழிவகுக்கக்கூடியது. பல சட்டவிரோத செயல்களை ஊக்குவிக்கக் கூடியது. எனவே, ஓர் அரசாக நாங்கள் அமெரிக்காவின் சட்டபூர்வ நடவடிக்கைகளை ஆதரிக்கிறோம் என்றும் ஜெய்சங்கர் குறிப்பிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 விக்கெட் வித்தியாசத்தில் இந்திய அணி அபார வெற்றி

கொல்கத்தா, ஜன.24

இங்கிலாந்துக்கு எதிரான முதல் ரி - 20 போட்டியில் 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் இந்திய அணி அபார வெற்றி பெற்றது.

ஜோஸ் பட்லர் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற் கொண்டு 5 ரி - 20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ரி - 20 போட்டி கொல்கத்தாவில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

இதில் நாணயச்சுழற்சியில் வென்ற இந்தியா பந்து வீச்சை தெரிவு செய்தது. இதையடுத்து இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக பிலிப் சால்ட் மற்றும் பென் டக்கெட் களமிறங்கினர். இதில் பிலிப் சால்ட் ஓட்டம் ஏதுமின்றி ஆட்டமிழந்து வெளியேறினார். பென் டக்கெட் 4 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ஜோஸ் பட்லர் நிலைத்து நின்று அரைச் சதம் கடந்தார். ஆனால், மறுமுனையில் மளமளவென விக்கெட்கள் சரிந்தன. இந்திய அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் இங்கிலாந்து அணி தடுமாறியது. அதிக பட்சமாக பட்லர் 68 ஓட்டங்களும், ஹாரி புரூக் 17 ஓட்டங்களும் எடுத்தனர். இது தவிர ஜாக்கோப் பெத்தேல்(7), ஜேமி ஓவர்டன்(2), கஸ் அட்கின்சன்(2) ஆகியோர் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். இறுதியில் இங்கிலாந்து அணி 20 ஓவர்களில், அனைத்து விக்கெட்களையும் இழந்து 132 ஓட்டங்கள் எடுத்தது. இதையடுத்து 133 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி இந்திய அணி விளையாடியது.

தொடக்க வீரர்களாக களமிறங்கிய சஞ்சு சாம்சன், அபிஷேக் சர்மா இருவரும் அதிரடியாக விளையாடினர்.




சஞ்சு சாம்சன் 26 ஓட்டங்களில் வெளியேறினார். பின்னர் வந்த சூர்யகுமார் யாதவ் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்.

மறுபுறம் அபிஷேக் சர்மா பந்து களை பௌண்டரி, சிக்ஸருக்கு பறக்க விட்டார் . சிறப் பாக விளையாடி அரைச் சதமடித்த அவர் 79 ஓட்டங்களில் வெளியேறினார். தொடர்ந்து திலக் வர்மா அதிர டியாக விளையாடினார். இதனால், இந்திய அணி 12. 5 ஓவர்களில் 3 விக்கெட் கள் இழப்புக்கு 133 ஓட்டங்கள் எடுத்து 7விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (எ)

# வெற்றிக்கு உதவிய பந்துவீச்சாளர்கள்

## சூர்யகுமார் யாதவ் பாராட்டு

கொல்கத்தா, ஜன.24

இங்கிலாந்துடனான போட்டியில் பந்துவீச்சாளர்கள் களத்தில் தமது திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தியதாக இந்திய அணியின் தலைவர் சூர்யகுமார் யாதவ் பாராட்டியுள்ளார்.

இந்தியா - இங்கிலாந்து இடையிலான முதல் ரி - 20 போட்டியில் இந்தியா வெற்றி பெற்றது. இந்த நிலையில், இந்திய அணியின் வெற்றிக்கு உதவிய பந்துவீச்சாளர்களை சூர்யகுமார் யாதவ் பாராட்டியுள்ளார். இது தொடர்பில் பேசிய அவர், "இந்திய வீரர்கள் அனைவரும், மிகவும் சுறுசுறுப்பாக செயல்பட்டனர். முதல் பந்தில் இருந்தே, அவர்களது சுறுசுறுப்பு எனக்கு புத்துணர்ச்சியை கொடுத்தது. இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் எங்கள் பந்துவீச்சாளர்கள் களத்தில் தங்களது திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தினர்.

வருண் சக்கரவர்த்தி, களநிலவரம் அறிந்து சிறப்பாக பந்துவீசினார். எந்த நேரத்தில் எப்படி பந்துவீச வேண்டும் என்பது அவருக்கு நன்றாக தெரிந்திருக்கிறது. அர்ஷ்தீப் சிங், பொறுப்பை உணர்ந்து பந்துவீசுகிறார். இந்த இருவரும் முதல் 5 விக்கெட்களை வீழ்த்தி அசத்தியது, வெற்றிக்கு மிகமிக்கிய காரணம். ஹர்த்திக் பாண்டியா புதிய பந்தில் பந்துவீசுவதால், எனக்கு கூடுதலாக ஒரு சுழற்பந்து வீச்சாளருடன் விளையாட வாய்ப்பு கிடைத்துள்ளது. கௌதம் கம்பீர் எங்களுக்கு நிறைய சுதந்திரத்தை கொடுத்துள்ளார். 2024 ரி - 20 உலகக் கிண்ணத்தில் விளையாடியதை விட சற்று வித்தியாசமாக விளையாட விரும்புகிறோம்"- என்று சூர்யகுமார் யாதவ் கூறினார்.

இதேவேளை, இந்திய வேகப்பந்து வீச்சாளர் அர்ஷ்தீப்சிங் இந்தப் போட்டியில் 2 விக்கெட்கள் வீழ்த்தினர். இதையும் சேர்த்து அவரது விக்கெட் எண்ணிக்கை 97ஆக (61 ஆட்டம்) உயர்ந்தது. இதன் மூலம் சர்வதேச 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் அதிக விக்கெட்கள் வீழ்த்திய இந்தியர் என்ற சாதனையை சுழற்பந்து வீச்சாளர் யுஸ்வேந்திர சாஹலிடமிருந்து கைப்பற்றினார்.

அத்தோடு, இந்திய அணி 43 பந்துகள் மீதம் வைத்து இலக்கை விரட்டிப்பிடித்தது. இந்த வகையில் இங்கிலாந்துக்கு எதிராக இந்திய அணியின் "மெகா" வெற்றி இதுவாகும். இதற்கு முன்பு இங்கிலாந்துக்கு எதிராக 13 பந்துகள் மீதம் வைத்து இலக்கை எட்டியதே இந்தியாவின் சிறந்த வெற்றியாக இருந்தது. (எ)



# ஐ. சி. சி. தரவரிசையில் முதலிடத்தில் பும்ரா




டுபாய்,ஜன.24

டெஸ்ட் கிரிக்கெட் வீரர்களுக்கான தரவரிசை பட்டியலை ஐ. சி. சி. வெளியிட்டுள்ளது. இதில் பந்துவீச்சாளர்களில் இந்தியாவின் ஜஸ்பிரீத் பும்ரா 908 புள்ளிகளுடன் முதலிடத்தில் தொடர்கிறார். அவுஸ்திரேலியாவின் பட் கம்மின்ஸ் (841) 2ஆவது இடத்திலும், தென்னாபிரிக்காவின் ககிசோ ரபாடா (837) 3ஆவது இடத்திலும் உள்ளனர்.

மேற்கு இந்திய தீவுகளுக்கு எதிராக முதல்தானில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் 6 விக்கெட்கள் வீழ்த்திய பாகிஸ்தான் அணியின் சுழற்பந்து வீச்சாளரான நோமன் அலி 761 புள்ளிகளுடன் 2 இடங்கள் முன்னேறி 9ஆவது இடத்தை பிடித்துள்ளார். (எ)

# பி. வி. சிந்து தோல்வி லட்சயா சென் வெற்றி

ஜகார்த்தா, ஜன.24

இந்தோனேசியா மாஸ்டர்ஸ் பட்மிண்டன் போட்டித் தொடரில் இந்தியாவின் பி. வி. சிந்து தோல்வியடைந்தார். இதேவேளை, லட்சயா சென் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.



இந்தோனேசியாவில் இந்தியா, ஜப்பான், மலேசியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் கலந்து கொள்ளும் இந்தோனேசிய மாஸ்டர்ஸ் பட்மிண்டன் போட்டி தொடர் நடைபெற்று வருகிறது.

இதில், பெண்கள் ஒற்றையர் பிரிவு போட்டியில், இரு முறை ஒலிம்பிக்கில் பதக்கம் வென்றவரான இந்திய வீராங்கனை பி. வி. சிந்து, வியட்நாமை சேர்ந்த குயென் துய் லின்னுடன் மோதினார். 37 நிமிடங்கள் நடந்த முதல் சுற்று போட்டியில் 22-20, 21-12 என்ற புள்ளி கணக்கில் தோற்று போட்டியிலிருந்து சிந்து வெளியேறினார்.

இதேவேளை, ஆண்கள் ஒற்றையர் பிரிவு போட்டியில் இந்திய வீரர் லட்சயா சென், ஜப்பானின் தகுமா ஒபயாஷியை 21 - 9, 21 - 14 என்ற புள்ளி கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றார். 39 நிமிடங்கள் நடந்த இந்த போட்டியில் லட்சயா சென் எளிதில் வெற்றி பெற்றார். (எ)

# ஜன்னிக் சினெர் அசத்தல் வெற்றி

மெல்பேர்ன், ஜன.24

அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரில் ஜன்னிக் சினெர் அரையிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் தொடரான அவுஸ்திரேலிய ஓபன் மெல்பேர்ன் நகரில் நடைபெற்று வருகிறது. இதன் 11ஆவது நாளான நேற்று முன்தினம் ஆடவர் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் நடப்பு சம்பியனும், முதல் நிலை வீரருமான இத்தாலியின் ஜன்னிக் சினெர், 8ஆம் நிலை வீரரான அவுஸ்திரேலியாவின் அலெக்ஸ் டி மினாருடன் மோதினார். இதில் ஜன்னிக் சினெர் 6-3, 6-2, 6-00 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதி சுற்றுக்கு முன்னேறினார். (எ)



# "ஆடைக் கட்டுப்பாட்டை இந்தியா கடைப்பிடிக்கும்"

புதுடில்லி, ஜன.24

சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரில் ஐ. சி. சியின் ஆடைக் கட்டுப்பாட்டை இந்தியா கடைப்பிடிக்கும் என்று பி.சி.சி.ஐ. செயலாளர் தேவஜித் சைக்கியா தெரிவித்தார்.

சம்பியன்ஸ் கிண்ண தொடர் பெப்ரவரி 19ஆம் திகதி பாகிஸ்தானில் தொடங்குகிறது. பாதுகாப்பு காரணங்களால் பாகிஸ்தான் சென்று விளையாட இந்தியா விட்டது. இதனால், இந்திய அணி பங்கேற்கும் ஆட்டங்கள் அனைத்தும் டுபாயில் நடத்தப்படுகிறது.

இதற்கிடையே இந்திய அணி வீரர்கள் அணியும் சீருடையில், தொடரை நடத்தும் பாகிஸ்தான் பெயரை பொறிக்க பி. சி. சி. ஐ. மறுப்பு தெரிவித்ததாக தகவல்கள் வெளியாகின.

இதை பி. சி. சி. ஐ. செயலாளர் தேவஜித் சைக்கியா மறுத்துள்ளார்.

"சம்பியன்ஸ் கிண்ண தொடரின்போது ஐ. சி. சி. சீருடை தொடர்பான அனைத்து விதிகளையும் பி. சி. சி. ஐ. பின்பற்றும். இலட்சினை, ஆடைக் கட்டுப்பாடு தொடர்பாக மற்ற அணிகள் என்ன செய்தாலும், நாங்கள் விதிமுறைகளை பின்பற்றுவோம்.

இதேவேளை, ஐ. சி. சி. ஊடக நிகழ்ச்சிகளுக்காக இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா பாகிஸ்தான் செல்வாரா? என் பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை"- என்றார்.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் மார்ச் 20ஆம் திகதி பங்களாதேஷுதுடன் மோதுகிறது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூச்சு...

திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். நாட்பட்ட நுரையீரல் அடைப்பு காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. (அ)

## கிளிநொச்சி...

மக்கள் குடியிருப்புபகுதிகளுக்குள் புகுந்து பெரும் அச்சத்தை ஏற்படுத்தி வருவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்

மேலும் வட்டக்கச்சி, பெரியகுளம் பகுதியில் இருந்து புளியம்பொக்கனை செல்லும் பிரதான வீதியில் வெள்ளம் பாய்வதன் காரணமாக கனரக வாகனங்கள் மாத்திரமே இவ்வீதி ஊடாக பயணிக்க கூடியதாக உள்ளதுடன் பாடசாலை மாணவர்கள் தமது கற்றல் செயற்பாட்டை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்தனர்.

மழையுடன் கூடிய வானிலை குறைவடைந்தாலும், நீர்த் தேக்கங்களில் இருந்து வெளியேறும் நீர் மக்கள் குடியிருப்புக்களை ஊடறுத்து செல்வதால் மக்கள் மூன்றாவது முறையாகவும் வெள்ள பாதிப்புக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 2026...

பிரதமர் குறிப்பிட்டார்.

தற்போதுள்ள கல்வி முறையை மாணவர் சமூகத்திற்கு மிகவும் பொருத்தமான வகையில் மாற்றுவதன் மூலம் கல்வி சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்படும் என்று பிரதமர் தெரிவித்தார்.

அழகியல், தகவல் தொழில்நுட் பம் மற்றும் கணக்கியல் போன்ற பாடங்களின் உள்ளடக்கத்தை மிகவும் பொருத்தமான தாக மாற்ற தாம் விரும்புவதாகவும், அந்தப் பாடங்க ளை ஒருபோதும் நீக்க எதிர்பார்க்க வில்லை என்றும் பிரதமர் கூறினார்.

கல்வியில் போட்டித்தன்மையைக் குறைக்கும் நோக்கில், 2026 ஆம் ஆண்டு முதல் கல்விச் சீர்திருத்தங்கள் செயல்படுத் தப்பட உள்ளதாகவும், பரீட்சை முறை மற்றும் பாடத்திட் டத்தை திருத்தம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார். (அ)

## மருதானை...

அதற்கு பதிலளித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜய பால,

இந்த விடயம் தொடர்பில் உடனடியாக ஆராய்ந்து பதிலளிப்பதாக தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் புத்திக்க மானப்பெருமவை தொடர்பு கொண்டு கேட்ட போது -

மருதானை பொலிஸ் நிலையத்தில் தற்கொலை சம்பவமொன்று பதிவாகியிருந்தது. இந்த விடயம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த பெண் அதிகாலை 4 மணிக்கும் 4.30 மணிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியிலேயே தற்கொலை செய்து கொண்டுள்ளதாகவே ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளது. அதற்கு அமையவே கொலையா, தற்கொலையா என்ற முடிவுக்கு வர முடியும். இருப்பினும் இதுவரையில் கிடைக்கப்பெற்ற ஆதாரங்களுக்கு அமைய குறித்த பெண் தற்கொலை செய்துள்ளமையே தெரிய வந்துள்ளது. குறித்த பெண்ணின் மீது போதைப்பொருள் பாவனை குறித்த பிடியாணையுள்ளமையும் குறிப்பிடத்தக்கது - என்றார். (அ)

## நான்...

என் மீது 24 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த 24 வழக்குகளும் தனிப்பட்ட வழக்குகள் அல்ல. மோசடியாளர்களை கைது செய்வதாக கூறிக்கொண்டே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. வைத்திய சாலைகளில் நோயாளிகளை கொலைசெய்கின்றனர். மன்னார் வைத்திய சாலையிலும் நோயாளிகளை கொன்றுள்ளனர்.

நான் நடந்து கொண்ட விதம் தவறு என அமைச்சர் கூறுகின்றனார். ஆனால் நான் வைத்தியராக இருக்கும்போது வழக்குகள் உள்ளனவா எனக் கூறுங்கள் பார்க்கலாம். நான் வடக்கின் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றேன்.

எனக்கு ஏன் பாராளுமன்றத்தில் உரையாற்ற நேரம் ஒதுக்கித்தரவில்லை எனச் சபாநாயகர் தெரியப்படுத்த வேண்டும். என்னை புலி புலி எனக் கூறி மன அழுத்தத்துக்கு உள்ளாக்குகின்றார்கள். ஏன் இவ்வாறு செயற்படுகின்றீர்கள்.

நான் புலி என்றால் என்னைக் கைது செய்யுங்கள். அல்லது என்னை துப்பாக்கியால் சுட்டுக்கொல்லுங்கள். மனிதக் கொலையில் ஈடுபட்ட அரசாங்கமே உள்ளது. 1987 காலத்தில் எத்தனை பேரைக் கொலை செய்தனர்.

அதேபோன்று என்னுடைய மக்களை இலட்சக்கணக்கில் முள்ளிவாய்க்காலில் கொன்றுள்ளார்கள். எனக்கு பாதுகாப்பும் வழங்கப்படவில்லை. வாகனமும் கூட வழங்கப்படவில்லை. நான் கொலை செய்யப்பட்டால் அதற்கு இந்த அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும் - என்றார். (அ)

## யாழில்...

இதன்போது அந்த வீதியால் வந்தவர்கள் அவரை தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவளை அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். மாரடைப்பு காரணமாக மரணம் சம்பத்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. (அ-05)

## வீதியை...

இந்நிலையில் படுகாயமடைந்த அவர் அச்சுவேலி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்னர் அங்கிருந்து யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவரை மோதிய மோட்டார் சைக்கிள் சாரதியும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (அ-05)

## புலமைப்...

தளத்திற்குச் சென்று பெறு பேறு களை பார்வையிட முடியும் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

செப்ரெம்பர் 15 ஆம் திகதி நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு மொத்தம் 323,879 மாணவர்கள் தோற்றியிருந்தனர்

இதேவேளை பரீட்சை வினாத்தாள்கள் வெளியானதால் இடைநிறுத்தப் பட்ட புலமைப்பரிசில் பரீட்சை பெறு பேறுகளை விரைவில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நேற்று பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போது தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சட்டத் துறையின் சர்வதேச சட்ட ஆய்வு மாநாடு சனியன்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜன. 24

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சட்டத்துறையின் ஏற்பாட்டில் வருடாந்தம் நடாத்தப்படும் யாழ்ப்பாண சர்வதேச சட்ட மாநாடு நாளையும் நாளை மறுதினமும் யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட ஹூவர் கலையரங்கில் காலை 9 மணி முதல் மாலை வரை இடம்பெறவுள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் ஊடக விவரிப்பு நேற்று காலை 10:00 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

இந்த ஊடக சந்திப்பில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், சுரானா மற்றும் சுரானா சர்வதேச வழக்கறிஞர் நிறுவனத்தைச் சேர்ந்த சஞ்சை சர்மா கிஷான் லால், சட்டத்துறை விரிவுரையாளர் திருமதி சுபாசினி ரமணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது, சட்டத்துறைத் தலைவர் திருமதி கோசலை மதன் யாழ்ப்பாண சர்வதேச சட்ட மாநாடு பற்றி விளக்கமளித்தார்.

அதன் விவரம் வருமாறு:

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சட்டத்துறை, இந்தியாவின் புகழ் பூத்த சுரானா மற்றும் சுரானா சர்வதேச வழக்கறிஞர் நிறுவனத்துடன் இணைந்து இரண்டாவது தடவையாகவும் 'முறை செய்' என்ற தலைப்பில் யாழ்ப்பாண சர்வதேச சட்ட மாநாட்டை ஜனவரி மாதம் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

இம்மாநாடானது யாழ். பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீட ஹூவர் கலையரங்கில் காலை 9 மணி முதல் மாலை வரை இடம்பெறவுள்ளது.

மாற்றத்திற்கான கருவியாக சட்டம் என்னும் சாரப்பட செயற்படல், நிலைமாற்றம், நிலைத்திருப்பு என்னும் தொனிப்பொருளில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இவ்வருட மாநாட்டின் முதல் நாள் நிகழ்வில் இலங்கை உயர்நீதிமன்ற நீதியரசர் ப்ரீத்தி பத்மன் சூரசேன பிரதம விருந்தினராகவும், தகவல் உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர்களில் ஒருவரான ஹிஷாலீ பின்டோ ஜெயவர்த்தன சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

முதல் நாள் நிகழ்வில் ஆளுகை நிலைமாற்றம் தொடர்பில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் டியான் ஷாவும், இலத்திரனியல் நிலைமாற்றம் தொடர்பாக சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி சுனில் அபேரட்ன வும் திறப்புரைகளை ஆற்றவுள்ளனர்.

முதல் நாள் நிகழ்வின் மற்றுமொரு சிறப்பம்சமாக மக்களின் அரசியலமைப்பு, அதன் எதிர்காலம் என்னும் தலைப்பிலான சிறப்புக் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறவுள்ளது. அந்தக் கலந்துரையாடலில் கொழும்புப் பல்கலைக்கழக சட்ட பீட முன்னாள் பேராசிரியர் வீ.த.தமிழ்மாறன், ஜனாதிபதி சட்டத்தரணி ஜெயந்தா டி அல்மெய்டா குணரட்ண, பேராதனைப் பல்கலைக் கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி கலன சேனாரட்ண ஆகியோர் உரையாளர்களாகவும் மாற்றுக் கொள்கை நிலையத்தின் சிரேஷ்ட ஆய்வாளர் பவானி பொன்சேகா உரையாளர் மற்றும் நெறியாளராகவும் பங்கு கொள்ளவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வில் இலங்கை உயர்நீதிமன்ற நீதியரசர் ஜனக் டீ சில்வா பிரதம விருந்தினராகவும், இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் சட்ட நிலையியற் குழுவின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சமந்தா உனம்பூவே சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)

## கடவுச்சீட்டை...

என்பது பல மாதங்களாகத் தீர்க்க முடியாத தேசியப் பிரச்சினையாக காணப்படுகின்றது. புதிய அரசாங்கம் கடந்த 2024 நவம்பர் 4 ஆம் திகதி முதல் நிகழ்நிலை முறையில் கடவுச்சீட்டை பெறுவதற்கான திகதிகளை ஒதுக்குவதற்கு நிர்ணயித்திருந்தாலும் தற்போதும் கூட கடவுச்சீட்டொன்றைப் பெற்றுக் கொள்ள மக்கள் 3 அல்லது 4 மாதங்கள் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளைத் தேடி வரும் ஏராளமானோர் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர்.

ஒவ்வொரு பிரிவுகளுக்கும் விண்ணப்பதாரர் ஒருவர் கடவுச்சீட்டைப் பெற எடுக்கும் நேரம், தினசரி வழங்கப்படும் மற்றும் விண்ணப்பிக்கும் கடவுச்சீட்டுக்களில் சராசரி எண்ணிக்கை, அத்துடன் இந்த கடவுச்சீட்டுகளை வழங்கும் திட்டத்தை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு தடங்களை ஏற்படுத்தியுள்ள காரணங்கள், இயல்பு நிலைக்கு திரும்ப எதிர்பார்க்கப்படும் காலம் குறித்தும் அறிந்து கொள்ள விரும்புகின்றோம்.

மேலும், ஜனவரி 2024 முதல் இன்று வரை கடவுச்சீட்டுக்களைப் பெற பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை, இதுவரை வழங்கப்பட்ட கடவுச்சீட்டுக்களின் எண்ணிக்கை, வழங்க வேண்டியுள்ள எண்ணிக்கை, தற்போது கையிருப்பில் இருக்கும் எண்ணிக்கை, தற்போது கடவுச்சீட்டுகளை வழங்கும் சேவை வழங்குநர் யார் என அறிந்து கொள்ள விரும்புகின்றோம்.

இது தொடர்பான விலைமனு கோரல் தொடர்பான தகவல்களை சபையில் சமர்ப்பிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன். வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை மேம்படுத்துவது முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும். இவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும் - என்றார். (அ)

## வடக்கு...

அமர்வில் நேற்று கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் இந்த விடயங்கள் தொடர்பில் பேசினார்.

முன்னாள் ஜனாதிபதிகளின் வாசஸ் தலங்கள் தொடர்பில் அரசாங்கம் எடுத்திருக்கும் தீர்மானங்களையும் தாம் வரவேற்பதாக அவர் கூறினார்.

இவ்வாறான அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்ந்தும் நடைபெற வேண்டும் எனவும் எதிர்வரும் தேர்தலுக்கான யுக்தியாக இந்த விடயங்கள் அமைந்து விடக்கூடாது எனவும் அரசாங்கத்தைச் செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்தினார்.

தூய்மையான ஒரு திட்டத்தை முன்னெடுக்கும் அரசாங்கம் பலதரப்பட்ட விடயங்களில் கவனம் செலுத்தும் போதே இந்த திட்டத்தில் வெற்றியடைய முடியும் என அவர் சுட்டிக்காட்டினார். (அ)

## அர்ச்சுனா...

தாம் முறைப்பாடு செய்துள்ள போதிலும் அது தொடர்பில் விசாரிக்கப்படவில்லை என பாராளுமன்ற உறுப் பினர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்தார்.

தமக்கு உரையாற்றுவதற்கு அரசாங்க தரப்பு நேரம் ஒதுக்கவில்லை என்றும் தமது முறைப்பாடு தொடர்பில் விசாரிப்பதில் காலதாமதம் ஏற்படுத்தி வருவதாக அவர் கூறினார்.

உடனடியாக இந்த பிரச்னைக்குத் தீர்வு வழங்க வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா கோரியுள்ளார்.

அதனையடுத்து, பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி, இந்த விடயம் பாராளுமன்றத்தின் சிறப்புரிமை பற்றிய குழுவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படும் எனக் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அனுர பிரியதர்ஷன யாப்பாவும் மனைவியும் சி.ஐ.டியால் கைது!

## அரச நிதி துஷ்பிரயோக குற்றச்சாட்டில்

கொழும்பு, ஜன. 24

**அரச நிதியைத் துஷ்பிரயோகம் செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பாவும் அவரது மனைவியும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் நேற்று முன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.**

2014 ஆம் ஆண்டில் பிங்கிரிய மற்றும் நாரம்மல ஆகிய பகுதிகளில் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கென, கனியவளக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தான சுமார் 61,46,000 ரூபாய் நிதியை முன்னாள் அமைச்சர் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.


அவ்வாறு பெற்றுக்கொண்ட நிதியை நிவாரணம் வழங்குவதற்குப் பதிலாக 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்துக்காகப் பயன்படுத்தியதாக முன்னாள் அமைச்சர் பிரியதர்ஷன யாப்பா மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, அரச நிதியை முறைக்கேடாகப் பயன்படுத்தியமை மற்றும் பொதுச் சொத்து சட்டத்தின் கீழ் குற்றமொன்றை இழைத்தமை என்பவற்றுக்காக, சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய, முன்னாள் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பாவும் அவரது மனைவியும் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (அ)

# யாழ்.வாசியும், குழந்தையும் கனடா விபத்தில் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 24

கனடாவில் இடம் பெற்ற வாகன விபத்தில் தந்தையும் அவரது மூன்று வயது மகளும் உயிரி ழந்துள்ளனர்.



வாகனமொன்றில் மோதுண்டதனால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வாகனத்தில் மோதுண்டு விபத்துக்குள்ளான நிலையில் குறித்த நபர் வாகனத்தை விட்டு கீழே இறங்கி மகளைத் தூக்கிக் கொண்டு வீதியின் மறுமுனைக்குச் செல்ல முயற்சித்தபோது மற்றும் ஒரு வாகனம் குறித்த இருவர் மீதும் மோதியதாக தெரிவிக்கப்படுகிறது.

இருவரும் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் பின்னர் சிகிச்சைகள் பலனின்றி இருவரும் உயிரிழந்தனர்.

இந்த வாகன விபத்தில் மூன்று வாகனங்கள் தொடர்புபட்டியிருந்ததாகவும், ஒரு வாகனத்தின் சாரதி சம்பவ இடத்தை விட்டு தப்பிச் சென்று விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவரின் பெயர் பகீரதன் என்றும், அவர் யாழ்ப்பாணம், நீர்வேலியை பூர்வீகமாக கொண்டவர் என்றும் தெரிய வந்துள்ளது. (அ)

# பெருந்தோட்ட மக்களுக்காக இவ்வருடம் 4350 வீடுகளை நிர்மாணிக்கத் தீர்மானம்!

கொழும்பு, ஜன. 24

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் பெருந்தோட்ட மக்களுக்கென இவ்வருடத்திற்குள் 4350 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளதாக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் தோட்ட மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் தங்களது அரசியல் நட்பு வட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்டது என இவர் சுட்டிக்காட்டினார்.

ஆகவே, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் இப் புதிய வீடுகள் தோட்ட புறங்களில் வாழும் உரிய பயனாளிகளுக்கு மாத்திரம் வழங்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் குடிசன புள்ளி விபர மதிப்பீடுகளுக்கு அமைய 83.75 வீதமானோர் இலங்கையில் சொந்த குடியிருப்புக்களில் வாழ்ந்து வருவதோடு அவற்றில் 5.6 வீதமானோர் தோட்ட பகுதியை சேர்ந்த மக்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதன் அடிப்படையில் தோட்ட புறங்களில் வாழும் மக்களை வறுமையிலிருந்து மீட்டெடுத்து அவர்களுக்கான வீட்டு பிரச்னைக்கு ஒரு தீர்வைப் பெற்றுக்கொடுப்பது அரசாங்கத்தின் கடமை எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் 10,000 இந்திய உதவி வீட்டுத் திட்டத்தின் கீழ் 1,300 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும், 2025 ஆண்டு முடிவதற்குள் 4,350 வீடுகளும், 2026 ஆம் ஆண்டில் மேலும் 4,350 வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டு பெருந்தோட்ட பகுதிகளில் வாழும் மக்களுக்கு அவ் வீடுகள் பகிர்ந்தளிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# ஐ.தேகவுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தை வெற்றி!

## ஐக்கிய மக்கள் சக்தி கூறுகிறது

கொழும்பு, ஜன. 24

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையிலான மற்றொரு சுற்றுப் பேச்சுவார்த்தை நேற்று முன் தினம் நடைபெற்றது.

இரு கட்சிகளின் பொதுச் செயலாளர்களின் தலைமையில் நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தை வெற்றிகரமாக அமைந்ததாக ஐக்கிய மக்கள் சக்தித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவின் ஒப்புதலைத் தொடர்ந்து, ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து பணியாற்றுவது குறித்து ஆராய்வதற்கான கலந்துரையாடல் கடந்த 18 ஆம் திகதி ஆரம்பமானது.

முதல் சுற்றுப் பேச்சுவார்த்தை வெற்றியடைந்ததைத் தொடர்ந்து, நேற்று முன் தினம் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

அதனைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் இரவு கொழும்பில் உள்ள விருந்தகம் ஒன்றில் இரு கட்சிகளின் பொதுச் செயலாளர்களின் தலைமையில் மற்றொரு கலந்துரையாடல் நடைபெற்றுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# நாகை - காங்கேசன்துறை இடையே விரைவில் சரக்குக் கப்பல் சேவை!

## மார்ச் மாதம் முதல் ஆரம்பிக்கப்படும்

கொழும்பு, ஜன. 24

தென்னிந்தியாவின் நாகப்பட்டினத்துக்கும் இலங்கையின் காங்கேசன்துறைக்கும் இடையில் புதிய சரக்குக் கப்பல் சேவை மார்ச் மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த இரண்டு துறைமுகங்களுக்குமிடையே நிரந்தரமான தொடர் சேவையை வழங்குவதற்காக ஏ அண்ட் என் லொஜிஸ்டிக்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 700 மெற்றிக் தொன் எடை கொண்ட 'தாரா கிரண்' என்ற கப்பலை தயார்படுத்தியுள்ளது.

கடலில் பயணிக்கும் தகுதி மற்றும் பிற சான்றிதழ்களை பெறும் செயல்முறைகள் பெப்ரவரி மூன்றாவது வாரத்துக்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் அதன் முதல் பயணம் மார்ச் முதல் வாரத்தில் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

40 ஆண்டுகால உலகளாவிய கப்பல் போக்குவரத்து நிபுணத்துவத்துடன் அந்தமானில் தலைமையகத்தைக் கொண்ட ஏ அண்ட் என் லொஜிஸ்டிக்ஸ் தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசாங்கங்களுக்கு நம்பகமான மற்றும் திறமையான இடப்பெயர்வு தீர்வுகளை வழங்கி வருகிறது.

2024 முதல் இலங்கை அடைந்து வரும் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையைக் கவனித்த ஏ அண்ட் என் லொஜிஸ்டிக்ஸ் இயக்குநர்கள் குழு தென்னிந்தியாவுக்கும் இலங்கையின் வடக்குக்கும் இடையிலான வணிக நடவடிக்கைகளை நேரடியாக மீண்டும் நிறுவும் வகையில் இந்த சேவையை ஆரம்பிக்கவுள்ளது.

இந்நிறுவனமானது மார்ச்சில் இந்த இரண்டு இடங்களுக்கும் இடையிலான ஒரு பயணிகள் படகுச் சேவையையும் ஆரம்பிப்பதற்கான ஆரம்பகட்ட வேலைகளை முடுக்கிவிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# 2024 ஆம் ஆண்டில் இலங்கையின் ஆடை ஏற்றுமதி 5 வீத அதிகரிப்பு!

கொழும்பு, ஜன. 24

2024 ஆம் ஆண்டில் இலங்கையின் ஆடை ஏற்றுமதி 5 வீதம் அதிகரித்து 4.76 பில்லியன் டொலர்களாகப் பதிவாகியுள்ளதாக ஒன்றிணைந்த ஆடை கைத்தொழிலாளர் மன்றம் தெரிவித்துள்ளது.

அதன்படி, அமெரிக்காவுக்கான ஏற்றுமதி 1.9 பில்லியன் டொலராகவும், ஐரோப்பிய ஒன்றியத்துக்கான ஏற்றுமதி 1.4 பில்லியன் டொலராகவும், பிரித்தானியாவுக்கான ஏற்றுமதி 675 மில்லியன் டொலராகவும் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஏனைய நாடுகளுக்கான ஆடை ஏற்றுமதிகளும் 2024 ஆம் ஆண்டில் 10.13 சதவீதம் அதிகரித்து 778.4 மில்லியன் டொலர்களாகவும் பதிவாகியுள்ளது.

எவ்வாறாயினும், ஆடைத் துறையின் சிறந்த ஆண்டாகக் கருதப்படும் 2022 ஐ விடவும் 2024 ஆம் ஆண்டில் ஏற்றுமதி செயல்திறன் பின்தங்கியுள்ளதாக ஒன்றிணைந்த ஆடை கைத்தொழிலாளர் மன்றம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# அஹூங்கல்ல கடலில் மூழ்கிய வெளிநாட்டுப் பிரஜைகள் மீட்பு

கொழும்பு, ஜன. 24

அஹூங்கல்ல கடலில் மூழ்கி உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த இரண்டு வெளிநாட்டுப் பிரஜைகள் அஹூங்கல்ல பொலிஸ் உயிர்காப்பு பிரிவினரால் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த 58 வயதுடைய பெண்ணும் 59 வயதுடைய ஆணுமே காப்பாற்றப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டுப் பிரஜைகள் இருவரும் நேற்று முன்தினம் பிற்பகல் அஹூங்கல்ல கடலில் நீராடிக்கொண்டிருந்த நிலையில் திடீரென கடலில் மூழ்கியுள்ளனர்.

இதன்போது அங்கு கடமையில் இருந்த பொலிஸ் உயிர்காப்பு பிரிவினர் வெளிநாட்டுப் பிரஜைகள் இருவரையும் காப்பாற்றி கரைக்குக் கொண்டு சென்று அவர்களுக்கு முதலுதவி அளித்துள்ளனர். (அ)

# அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களின் உதவியாளர்களுக்கு அரசு மட்டுப்பாடு

கொழும்பு, ஜன. 24

தற்போதைய அரசாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் உதவிக்காக நியமிக்கப்படக்கூடிய அதிகபட்ச ஊழியர்களின் எண்ணிக்கை அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அமைச்சர்களுக்கான உதவி ஊழியர்கள் அதிகபட்சமாக 15 பேருக்கு உட்பட்டவர்கள் என்பதோடு, பிரதி அமைச்சர்களுக்கான உதவியாளர்களின் எண்ணிக்கை 12 பேருக்கு மேற்படாத வகையில் காணப்படவேண்டும்.

அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் கடமைகளை மிகவும் திறமையாக மற்றும் அனைத்து தரப்பினருடனும் நல்ல ஒருங்கிணைப்புடன் பணிகளை முன்னெடுத்துச் செல்ல இந்த உதவி ஊழியர்களை நியமிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்வரும் ஊழியர்களின் எண்ணிக்கையானது அதிகபட்ச எண்ணிக்கையை விட அதிகமாக இருக்கக் கூடாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.01.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org